பி னோ க்கி யோ

(ஒரு மரப் பாவையின் கதை)

மூன்றும் புத்தகம்

3

மூல ஆசிரியர் :

“கல்லோடி” (COLLODI)

தமிழாக்கம் :

ஜி. ராமசுப்பிரமணிய அய்யர்

அம்பாசமுத்திரம்

கிடைக்குமிடம் :

முதற் பதிப்பு: நவம்பர், 1962.

விலை ரூ. 1-00.

சமர்ப்பணம்

என் பேரக் குழந்தை ஒருவன், கோடை விடுமுறைக்கு ஊருக்கு வந்திருந்த பொழுது, கதை யின் சுவையில் ஈடுபட்டு, இப்புத்தகத்தின் கையெழுத் துப் பிரதியை, ஒரு பகல்பொழுதின் குறையளவில் உட்கார்ந்தது உட்கார்ந்தபடி படித்து முடித்தான். அப்பொழுது அவனுக்கு வயது ஒன்பது. அவனுக்கு மூத்தவன் ஒருவன், பதின்மூன்று வயதுச் சிறுவன். அவனுக்காக, அவனுடன் இதன் ஆங்கிலப் பதிப்பை நான் வாசித்தபோது, கதையின் அழகு அவன் நெஞ்சில் ததும்பும்போதெல்லாம், இதைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும் என்று என்னைத் தூண்டியதுமட்டும் அல்லாமல், அவனும் அவனுக்கு மூத்தவனுமாக, என் மொழிபெயர்ப்பை நல்ல கையெழுத்துப் பிரதியாக எழுதிக்கொடுத்தார்கள். அவர்கள் குதூகலம் பாதி, என் ஆசை பாதியாக இப் புத்தகம் உருப்பெற்றது. அவர்கள் வயதுச் சிறுவர் களுக்கு இப்புத்தகம் சமர்ப்பணம்.

மொழி பெயர்ப்புரிமையும் புத்தக பதிப்பு உரிமையும் ஆசிரியருக்கு.

The Progressive Printers, Madras-1.

முன்னுரை

பினேஷியோ உலகப் பிரசித்திபெற்ற பாவைக் கதை. கல்லோடி என்ற புனைப்பெயர் கொண்டவரால் எழுதப்பட்டு 1883 ஆம் வருஷத்தில் இத்தாலி தேசத்தில் பிரசுரம் செய்யப்பட்டது. அதன் மேதையும் கவிதையும் சிறியவர் மட்டும் அன்றி பெரியோரும் படித்து இன்புறக்கூடிய அழகு வாய்ந்தது. இதன் ஆங்கிலப் பதிப்பின் உரிமையாளர்களான Ernest Benn, Dent & Sons, ஆக இரண்டு கம்பெனியாரிடமிருந்தும் அனுமதி பெற்று இந்தத் தமிழ் மொழி பெயர்ப்பு வெளியாகிறது. Ernest Benn கம்பெனியாருக்காக Murray செய்த மொழிபெயர்ப்பை, Tassinari திருத்தி அமைத்தபடி Dent & Sons கம்பெனியார் Everyman's Library, Children's Illustrated Classics, ஆக இரண்டு பதிப்புகளிலும் இப்புத்தகத்தைப் பிரசுரம் செய்திருக்கிறார்கள். (இந்நூலில் உள்ள சித்திரங்கள் Dent & Sons கம்பெனியாருக்கு உரிமையானது.) (இந்நூலின் பிற்பகுதியிலுள்ள வர்ணச் சித்திரங்கள் New York, Grosset & Dunlap—கம்பெனியாரைச் சேர்ந்தவை. மற்றவை Dent & Sons கம்பெனியாருக்கு உரிமையானது.) இந்நூலை மொழி பெயர்ப்பதற்கும் அதிலுள்ள சித்திரங்களைப் பிரசுரிப்பதற்கும் அனுமதி கேட்டபோது, மனமுவந்து அனுமதி தந்ததற்கு நான் கடமைப் பட்டவனாய் இருக்கிறேன்.

சிறுவர்களுக்குப் பயன்படும் என்ற ஆசையில் இந்த நூல் என் கையில் தவழ்ந்து வளர்ந்தது. இலக்கணம் வழுவாத எளிய நடையில், சிறுவர் அறிவிற்கு எட்டிய ரசனையான அழகில், இந்த மொழிபெயர்ப்பை எழுத வேண்டும் என்பது எனது முயற்சி. ஆனாலும், ஆங்கு ஆங்கு, பொருளின் கருத்து என்னை உயரே அழைத்துச்

சென்றபோது, சிறுவர்கள் என்ற நினைப்பில் அந்த நினைவுகளைத் தடை செய்யாமல், சிறுவர்களும் பெரியவர்கள், ஆவார்கள் என்ற எண்ணத்தில், கருத்துக்களின் உயர்வைப் பின் தொடர்ந்து சென்று, உயர்வுக்கு உகந்த உல்லாசங்கள் ஊடே ஊடே காணப்படலாம். ஒரு நாட்டின் நூலை இன்னொரு நாட்டில் பெயர்க்கும்போது இன்றியமையாத சில மாறுதல்கள் அவசியமாகிறது. நாட்டிற்கேற்ப, காலத்திற்கேற்ப, புத்திக்கேற்ப, எவ்வித மாறுபாடு செய்த போதும் பினேஷியோவின் அழியாத அழகு திகழ்ந்து கொண்டே இருக்கும். நடையில் எளிமை இருந்தால் கருத்தின் ஆழமும் உயர்வும் குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்குமே அல்லாது அயர்வு கொடுக்கும் என்று நான் நினைக்கவில்லை. முதல் நூலின் பெருமைக்கு குறைவு ஏற்படாதபடி இந்த தமிழ் மொழிபெயர்ப்பு அமைந்திருக்கிறது என்று அறிவுடையோர் பாராட்டு கிடைக்குமாயின், அதுவே தமிழ் மொழியின் சிறுவர் இலக்கியத்திற்கு நான் செய்யக் கிடைத்த பணி.

இந்நூலை நல்ல முறையில் பிரசுரிக்க உதவி செய்த Higginbothams Manager ஸ்ரீ சங்கரநாராயணய்யர் அவர்களுக்கும், இப்புத்தகம் கையெழுத்துப் பிரதியாக இருந்த காலத்தில் ஆங்கிலப் பதிப்புடன் ஒத்துப்பார்த்து ஊக்கமளித்த பேராசிரியர் எஸ். வானமாமலை அய்யங்கார் அவர்களுக்கும் என் நன்றி உரித்தானது.

அம்பாசமுத்திரம்,
10-11-62.

ஜி. ராமசுப்பிரமணிய அய்யர்

பினோஷியோ

(ஒரு மரப் பாவையின் கதை)

1. புரு பறக்கிறது

நாய்—வளையமும் கனத்த சங்கிலியும் கழுத்தை விட்டு நீங்கிய பின், பினோஷியோ தேவதை இருந்த வீட்டை சீக்கிரம் அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் வெகு வேகமாய் ஓடினான். வெகு தூரம் ஓடிய பின் பரந்த ஒரு சமவெளியை அடைந்து, அங்கு நின்று சுற்று முற்றும் பார்க்கும்போது, பூனையையும் நரியையும் சந்தித்து தான் அவதியுற்ற இடம் கண்களுக்குத் தெரிந்தது. தூரத்தில் தள்ளி, தன்னை கட்டி தொங்கவிட்டு தூக்கிலிட்ட ஆலமரம் தெரிந்தது. ஆனால் எங்கு எங்கு சுற்றி எவ்வளவு எவ்வளவு பார்த்தாலும், நீலக் கூந்தல் கொண்ட அந்த தேவதையின் வீடு கண்களுக்கு புலப்படவே இல்லை.

தன்னை அறியாமல் மனதில் சலிப்பும் பயமும் புகுந்தது. ஓடிச் சென்று, வெள்ளை வெளேர் என்ற அந்தச் சிறிய வீடு, முன் இருந்த இடத்தையே அடைந்தான். இடம் அதுதான். ஆனால் அந்த வீட்டைக் காணவில்லை. அந்த வீடு இருந்த இடத்தில், ஒரு சிலுவைக் கல் நட்டு, வெட்டெழுத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

"பினோஷியோவால் கைவிடப்பட்டதால் மனம் உடைந்து உயிர் துறந்த நீலக் கூந்தல் தேவதை இங்கு அடக்கம் பெற்றிருக்கிறாள். கண் உள்ளவர் அழுமின்."

ஒவ்வொரு எழுத்தாக எழுத்துக் கூட்டி இந்தக் கல்வெட்டை வாசித்து முடித்ததும் பினோஷியோ அடைந்த துக்கத்தை எப்படி எழுத்தினால் எழுத முடியும்? முகம் குப்புற கீழே விழுந்து அந்தக் கல் வெட்டை ஆயிரம் முத்தமிட்டு நெஞ்சு உடைந்து அழுதான். இரவு முழுவதும் அழுதான். இரவு கழிந்து விடியும்போதும் இன்னும் அழுது கொண்டிருந்தான். கண்களில் கண்ணீர் இல்லாததால் கண்கள் அழ மறுத்தன. ஆனாலும் அழுதான். அவன் அழுத அழுகையும் சோகமும் விம்மி அழுத விக்கலும் நாற்புறமும் சிராய்ந்து பக்கத்தில் இருந்த குன்றுகளெல்லாம் எதிர் ஒலி எழுப்பின.

அவன் அழுதான். "ஐயோ தேவதையே, நீ ஏன் இறந்தாய்? உனக்குப் பதிலாக நான் இறந்திருக்கக் கூடாதா! நான் கெட்டவன். நீ நல்லவள். என் தகப்பனார் எங்கிருக்கிறார்? ஐயோ, தேவதையே நான் எங்கே அவரைக் காண்பேன்? இனிமேல், அவரை விட்டுப் பிரியாமல், ஒரு நாளும் விட்டுப் பிரியாமல், எந்நாளும் அவர் கூடவே இனி நான்

இருக்க வேண்டும்....ஐயோ, தேவதையே, நீ நிஜ மாகவே இறந்து போய் விட்டாயா? இறக்கவில்லை என்று ஒரு வார்த்தை சொல்லேன். உனக்கு என் மீது அன்பு இருந்தால், உன் சகோதரன் பினோஷி யோவை நீ நேசிப்பது உண்மையானால், உயிருடன் ஓடி வா. முன்போல் பழையபடி ஓடி வா. நான் உதவியற்று தனியே உழலுவதைப் பார்த்து உன் நெஞ்சம் வருந்தவில்லையா? கொலையாளிகள் வந்து என்னை மறுபடியும் கட்டி தூக்கில் இடுவார்களே; அப்பொழுது யார் எனக்கு உதவி செய்வார்கள்? இறந்து போவேனே. ஐயோ உலகில் நான் தனியாய் எப்படி உயிர் வாழ்வேன்? நீயும் இல்லை. என் தகப் பனும் இல்லாவிட்டால் எனக்கு யார் உணவு அளிப்பார்கள்? இரவு எங்கு படுத்து உறங்குவேன்? புதுச் சட்டை யார் வாங்கித் தருவார்கள்? இதைவிட நான் நூறு தரம், ஆயிரம் தரம் சாவது நல்லது. நான் சாகவேணும். நான் சாகவேணும். ஓ! ஓ! ஓ!" என்று கத்தி, தலைமயிரை பிய்த்துக் கொண் டான்.

மரப்பாவையின் தலைமயிர் மரத்தினால் செதுக் கியதால், தலைமயிரை பிய்த்துக் கொள்ளக்கூட அவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை. தலையை தொட்ட பொழுது "டொக், டொக்" என்று கை தலையை இடித்தது.

அந்த சமயம் அவன் தலைக்கு உயரே ஒரு புறா பறந்தது. தூர உயரத்தில், தன் சிறகுகளை விரித்து, ஆகாயத்தில் நின்றுகொண்டு, "குழந்தாய்! நீ என்ன செய்கிறாய்?" என்று கேட்டது.

"உனக்குத் தெரியவில்லையா? நீ பார்க்கிறாயே, நான் அழுது கொண்டிருக்கிறேன்" என்றான் பினோ

ஷியா கண்களை சட்டையின் நுனியால் துடைத்துக் கொண்டு, தலையை ஆகாயத்தை நோக்கி உயர்த்திப் பார்த்தான்.

"உன் சிநேகிதர்களில் யாரேனும் பினோஷியோ என்று பெயர் கொண்ட மரப்பாவை உண்டா?" என்று கேட்டது புரு.

"பினோஷியாவா? பினோஷியோ என்று பெயர் சொன்னாய்?" என்றது அந்த மரப்பாவை. ஆத்திரத்துடன் எழுந்து நின்று, "நான்தான் பினோஷியோ, நான்தான் பினோஷியோ" என்றது.

இதைக கேட்டதும் அந்தப் புரு வேகமாய்ப் பூமியை நோககி இறங்கிற்று. அந்தப் புரு ஒரு பெரிய கோழியை விடப் பெரியதாய் இருந்தது.

"உனக்கு ஜெப்பெட்டோவைத் தெரியுமா?" என்று கேட்டது புரு.

"தெரியுமாவா? அவர் என் பிதா. அவர் உன்னிடம் என்னைப் பற்றி பேசினாரா? அவரிடம் என்னை நீ கூட்டிக்கொண்டு போவாயா? அவர் உயிருடன் இருக்கிறாரா? ஐயோ சொல்லேன். என் மீது இரக்கம் கொண்டு சொல்லேன். அவர் உயிருடன் இருக்கிறாரா?"

"மூன்று நாட்களுக்கு முன் அவரை கடற்கரையில் கண்டேன்."

"என்ன செய்து கொண்டிருந்தார்?"

"சமுத்திரத்தை கடந்து செல்ல ஒரு படகு கட்டிக் கொண்டிருந்தார். மூன்று மாதங்களாக பூமி முழுதும் உன்னைத் தேடி அலைந்தாராம். உன்னைக்

காணக் கிடையாததால் கடல் கடந்து அப்பால் உள்ள நாடுகளில் உன்னைத் தேட எண்ணம் கொண்டிருக்கிறார்."

"இங்கிருந்து சமுத்திரக்கரை எவ்வளவு தூரம்?" என்று கேட்டான் பினேஷியோ ஆவலுடன்.

"அறுநூறு மைல்களுக்கு மேல் இருக்கும்."

"ஐயோ புறாவே. உன் இறகுகள் எனக்கு இருந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும்."

"நீ வருவாயானால் உன்னை நான் அழைத்துச் செல்கிறேன்."

"எப்படி?"

"குதிரை சவாரி செய்வதுபோல் என் முதுகில் உட்கார்ந்து கொள்....நீ அதிகம் கனமா?"

"ஐயோ! கனமா! நான் கனமே இல்லை. காற்றிலும் குறைந்த கனம்."

வேறு வார்த்தை சொல்லாமல் பினேஷியோ அந்தப் புறாவின் முதுகில் குதிரை சவாரி செய்வது போல் ஏறி உட்கார்ந்து, "குதிரையே, குதிரையே, ஓட்டமாய் ஓடு. எனக்கு என் தகப்பனாரை உடனேயே பார்க்கவேணும்" என்றான்.

பினேஷியோவையும் தூக்கிக்கொண்டு புறா ஆகாயத்தில் பறந்தது. சில நிமிஷங்களுக்குள் மேகங்களை எட்டி, மேகங்களை உராய்ந்து செல்வது போன்ற உயரத்தை அடைந்தது. அந்த உயரத்திலிருந்து பினேஷியோ கீழே பூமியைப் பார்த்தபொழுது

அவன் தலைசுற்றி கீழே விழாமல் இருப்பதற்காக, அந்த இறகு உள்ள குதிரையின் கழுத்தைச் சுற்றிக கைகளை இறுக்க கோர்த்துக கொண்டான்.

குதிரை பகல் முழுதும் பறந்தது.

இரவு வந்தவுடன் அந்தப் புறு "எனக்குத் தாக மாய் இருககிறது" என்று சொல்லிற்று.

"எனக்கும் பசிக்கிறது" என்ருன் பிநோ ஷியோ.

"இங்குள்ள புறுக்கூட்டில் சிறிதுகாலம் தாம தித்து இளைப்பாறி நாளைக் காலை சமுத்திரக்கரையை அடைவோம்" என்றது புறு.

அவர்கள் ஒரு புறுககூட்டை அடைந்தார்கள். அங்கு புறுககளே இல்லை. ஒரு சட்டியில் ஜலமும் ஒரு கூடையில் கீரையும் இருந்தது.

அவன் ஆயுசு காலத்தில் பிநோஷியோ கீரை தின்றதே இல்லை, அது அவனுக்குப் பிடிக்காது.

தின்ருல் வயிற்றைக் குமட்டும். ஆனல், அன்று அவன் தகப்பனுரைக் காணும் நினைவில் வயிறு நிறையக் கீரை தின்ருன். கூடையில் இருந்த கீரையை எல்லாம் அநேகமாக தின்று முடித்தபின், "கீரை ருசியாய் இருக்குமென்று நான் நினைக்கவே இல்லை" என்ருன்.

"பசியும் நிஜமாய் இருந்து, தின்பதற்கும் வேறு இல்லாவிட்டால் எதுவும் ருசியாய் இருக்கும். வேண்டியது வேண்டாதது என்பது பசிக்கு இல்லை" என்றது புரு.

இவ்விதம் இருவரும் உணவை முடித்துவிட்டு சமுத்திரக்கரையை நோக்கி யாத்திரையைத் தொடங்கினர்கள். புரு மறுபடியும் பறந்தது. மறுநாட் காலை இருவரும் சமுத்திரக்கரையை அடைந்தார்கள்.

பினேஷியோவை பூமியில் இறக்கியதும், நல்ல காரியங்களை நாணிச் செய்யும் பெரியார் போல் பினேஷியோவின் வந்தனத்திற்குக் காத்திருக்காமல் புரு பறந்தோடி மறைந்தது.

சமுத்திரக்கரையில் செம்படவர்கள் நின்று, வான் ஓரம் தூரத்தை உற்று நோக்கி, கைகளை நீட்டி, சுட்டிக்காட்டி சப்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

"யாரோ தகப்பனுராம், பையனைக் காணுததால், அவனைத் தேடுவதற்காக கடலைக் கடக்க, ஒரு படகு செய்து, இன்று புறப்பட்டார். புயல் காற்று வீசி கடல் கொந்தளிக்கிறது. படகு மூழ்கும்போல் இருக்கிறது."

"படகு எங்கே?"

"என் கை விரலுக்கு எதிரே நேரே பார். உனக்குத் தெரியும்" என்றாள் அந்தக் கிழவி. வெகு தூரத்தில், வான் ஓரத்தில், ஒரு கொட்டாங்கச்சி அளவில் தெரிந்த ஒரு பொருளைக் காட்டினாள். அதில் ஒரு மனித உருவம் சிறிதாகத் தெரிந்தது.

பினோஷியோ அந்தப் பொருளை இமை கொட்டாமல் பார்த்தான். கூர்ந்து கவனித்து, "ஐயோ, அப்பா, அப்பா" என்று கதறினான்.

இதற்கு இடையில், அந்தப் படகு, அலைகளால் மோதப்பட்டு, ஒரு சமயம் கண்களுக்குத் தெரியாமல் அலைகளின் ஊடே மறையும். அடுத்த அலையில் அலையின் உச்சியில் மிதக்கும். பினோஷியோ கடற்கரை ஓரத்தில் இருந்த ஒரு உயர்ந்த பாறை மீது ஏறி, தகப்பனை பெயர் சொல்லி உரத்து கூவி, தன் குல்லாவாலும் கைக் குட்டையாலும் கைகளாலும் இயன்ற அளவு சமிஞ்ஞை செய்து அயர்ந்தான்.

புத்திர பாசத்தின் விந்தைதான் என்னே! அந்த அலைகளுக்கும் புயல்களுக்கும் நடுவில், புயலின் இரைச்சலின் ஊடேயும், பினோஷியோவின் சப்தம் கேட்டு, ஜெப்பெட்டோ தன் குல்லாவை எடுத்து கரையைப் பார்த்து அலைத்து "உன்னை அடையாளம் கண்டு கொண்டேன். முடியுமானல் வருவேன். ஆனல் புயல் இருக்கும் வேகத்தில் என்னல் கரைக்கு வருவதற்கு இல்லை. படகு ஓட்டுவதற்கும் இல்லை" என்று கை அயர்வது போல் இருந்தது.

திடீரென்று ஒரு பெரிய அலைவீசி, ஜெப்பெட்டோவின் படகு கடல் நீரில் மறைந்தது. அங்கிருந்த மீன் படவர்கள் சிறிது நேரம் நின்று பார்த்து

படகை மீளவும் காணக் கிடையாததால், பரிதாபத் துடன் கடவுளை வாழ்த்தி வீடு திரும்பினர்.

அந்த சமயம் புயற் காற்றிலும் உக்கிரமாக "ஹோ" என்று அலறும் சப்தம் கேட்டது. பாறை மீதிருந்த பினோஷியோ "என் தகப்பனுரை நான் காப்பாற்றுவேன்" என்று கூச்சலிட்டு அலைகளுக்கு நடுவே குதித்தான். மரத்தினுல் செய்யப்பட்ட பொம்மையானதால் ஜலத்தில் மூழ்காமல் மீன் போல் மிதந்து நீந்தினுன்.

காற்று வேகமாய் அடித்தபொழுது ஜலத்தில் மூழ்கியும், அடுத்த கணம் அலைகளின் உச்சியில் மிதந்தும், மூங்கி மூங்கி, எழுந்து எழுந்து, ஒரு சமயம் கைகளும் ஒருசமயம் கால்களும், ஜலமட்டத்திற்குமேல் தெரிய அலைகளுடன் போராடிக் கொண்டிருந்தான்.

அவன் அலையில் போராடியது புயல் வேளையில் மனிதன் மனதில் நல்ல நினைவுகளும் தீய எண்ணங் களும் தோன்றி மறைவது போல இருந்தது. செம் படவர் கரையில் நின்று கடவுளை வாழ்த்தினர்.

2. தேனீ ஊர்

தன் தகப்பனாரைத் தேடி காப்பாற்றலாம் என்ற எண்ணத்தில் பினோஷியோ இரவு முழுதும் கடலில் நீந்தினான்.

அன்று இரவுதான் என்ன பயங்கரமான இரவு! யானை துதிக்கை கனத்தில் மழை தாரை பெய்தது. ஆலங்கட்டிகள் கல்கனத்தில் விழுந்தன. இடி ஒலி வானைப் பிளந்தது. மின்னல் ஒளி இருளைப் பகல் ஆக்கிற்று.

விடியும் சமயம், மரங்கள் அடர்ந்த நிலத்தின் பரப்பும் கரை ஓரமும் அவன் கண்களுக்குத் தென்பட்டது. கடல் மத்தியில் உள்ள ஒரு தீவு அது.

எப்படியாவது கரையை அடைய வேண்டும் என்று முடியும் மட்டும் முயற்சி செய்தான். முடியவில்லை. அடுக்கடுக்காய் வரும் அலை வரிசைகள் ஒன்றின்மேல் ஒன்றாய் ஓடி விழுந்து, ஒரு சுள்ளிக் கட்டையையும் வைக்கோல் துரும்பையும் போல், பினோஷியோவை இங்கும் அங்கும் ஆட்டி அலைத்தன. கடைசியாக, அதிருஷ்டவசமாக, ஒரு பெரிய அலை, மிகுந்த வேகத்துடன் கடல் நீரை சுருட்டிக் கரையில் மோதியபோது, பினோஷியோ அதன்

உச்சியில் மிதந்து, கடற்கரையில் மணற்பாங்கில் விட்டு எறியப்பட்டான்.

அவன் விழுந்த வேகத்தில் அவன் உடல் எல்லாம் குலுங்கியது. முதுகு எலும்பும் நெஞ்சு எலும்பும் நெக்கு ஒடிந்தது போல ஒலித்தன. "இந்தத் தடவை பிழைத்தேன்" என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

சிறிது நேரத்தில் வெய்யில் வந்தது. மேகங்கள் எல்லாம் கலைந்தன. சூரியன் முழு ஜோதியுடன் உலா புறப்பட்டான். தூங்கும் குழந்தை போல் சமுத்திரமும் சாந்தி அடைந்தது.

மரப்பாவை தன் உடைகளை மணலில் உலர்த்த விரித்து, அந்த பரந்த ஜலப் பரப்பில் ஒரு மனிதன் தென்படும் சிறு படகு ஏதாவது கண்ணுக்குத் தெரிகிறதா என்று கூர்ந்து கவனித்தான். பார்க்கப் பார்க்க, நீலவானும், கருங்கடலும், வெகு தூரத்திற்கு அப்பால் கண்ணுக்குத் தெரியாத ஒரு பாய் மரமும் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை.

"இந்தத் தீவுக்கு என்ன பெயர்?" பூகோளம் படியாத குறை அவனை வாட்டியது. "மனிதனை மனிதர் தின்னும் ஜாதியார் இருப்பார்களோ? குழந்தைகளை தூக்கில் இடும் ஜாதியார் இல்லாமலும் இருந்தால் அதுவே போதும். யாரிடம் கேட்கலாம்? ஒருவரும் இல்லாவிடில் யாரிடம் கேட்பது? ஒரு வேளை ஒருவரும் இல்லாத தீவு ஆனல்?"

ஒருவருமே இல்லாத நாட்டில் ஏகாந்த சிறை வாசம் ஏற்படுமோ என்று திகில் அடைந்து அழ ஆரம்பித்தான். அப்போது கரைக்கு சிறிது தூரத்திற்கு அப்பால், பெரிய மீன் ஒன்று,

உல்லாசப் பொழுது போக்காக, ஒரு அலுவலும் இல்லாமல், ஜல மட்டத்திற்கு மேல் முகத்தைக் காட்டி மிதந்து கொண்டிருந்தது.

மீன் பெயர் தெரியாததால், மரியாதையான தொனியில், அதன் காது கேட்கும் மட்டும் இரைந்து,

" மீனரே, மீனரே, உம்மிடம் ஒரு வார்த்தை பேசலாமா ? " என்றான்.

" இரண்டு பேசலாம் " என்றது மீன்.

அது டால்பின் ஜாதி மீன். மீன் இனம் எல்லா வற்றிலும் சாந்த குணமும் அமரிக்கையான சுபாவமும் படைத்த மீன் அது.

" இத்தீவில் மனிதர் வாழ்கிறார்களா ? ஒரு வேளை நான் உணவு தேடி உள்ளே சென்றால் தேடிச் சென்றவனை உணவு ஆக்காமல் விடுவார்களா ?"

" மனிதர் இருக்கிறார்கள. ஊர்களும் இருக் கின்றன. சிறிது தூரம் போனால் ஊர் தெரியும்."

" எந்தப் பாதையாய் போக வேண்டும் ?"

" இடது புறம் பாதை வழியாய் உன் மூக்கை நோக்கி நேரே போ. வழி தப்பாது " என்றது.

" இன்னொரு விஷயம் கேட்க அனுமதி கொடு, நீ இரவும் பகலும் சமுத்திரத்தில் வாழ்கிறாயே. ஏதாவது படகும் அதில் என் தகப்பனாரையும் பார்த்தாயா ?"

" உன் தகப்பனார் யார் ? "

"அவர் ரொம்ப நல்லவர். அவரைவிட நல்ல தகப்பனார் கிடையாது. என்னைவிட கெட்ட பையனும் கிடையாது."

"நேற்று அடித்த புயலில் அந்தப் படகு மூழ்கி இருக்கும்."

"என் தகப்பனார்?"

"இங்கு சில நாட்களாக சமுத்திரத்தை ரணகள மாக்கி பாழ்படுத்திக் கொண்டு ஒரு பெரிய திமிங்கிலம் திரிகிறது. அது விழுங்கி இருககும்."

"அந்தத் திமிங்கிலம் ரொம்பப் பெரிதோ?" என்று கேட்டான் பினோஷியோ. அவன் உடம்பு எல்லாம் வியர்த்து நடுங்க ஆரம்பித்தது.

"பெரிதா! அதற்கு உவமை சொல்ல வேண்டு மானல், ஒரு பெரிய ஐந்து மாடி வீட்டை விட அது பெரிது. அதன் அண்ணாந்த வாய் வழியாக ஒரு புகை வண்டித் தொடர், இழுக்கும் புகை வண்டியுடன் வேகமாய் ஓடிச் செல்லும். அவ்வளவு பெரிது."

"ஐயோ கடவுளே!" என்றான் பினோஷியோ பயந்து போய். உலர்த்தப் போட்ட ஆடைகளை அவசரமாய் எடுத்து அணிந்து கொண்டு, "மீனரே, விடைபெற்றுக் கொள்கிறேன். உமக்குக் கொடுத்த சிரமத்திற்கு மன்னிக்கவும்" என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டு மீன் காட்டிய வழியே பினோ ஷியோ நடந்தான். தன்னையறியாமலே நடை வேகமாக மாறிற்று. வேகம் ஓட்டமாய் மாறியது. பின்னும் பினோஷியோவிற்கு தான் ஓடுவதான உணர்ச்சி இல்லை. ஒரு சிறிய சப்தம் கேட்டாலும்

திரும்பிப் பார்த்து வாய் வழி ஓடும் வண்டித்தொடருடன் திமிங்கிலம் துரத்தி வருவதாகப் பயந்தான்.

அரை மணி நேரம் நடந்த பின் அவன் மீன் சொன்ன ஊரை அடைந்தான். அந்த ஊரின் பெயர் தேனீ ஊர். தேன் கூட்டில் தேனீக்கள் போல் அந்த ஊர் ஜனங்கள் எல்லாரும், ஒவ்வொருவரும் அவரவர் வேலையை செய்து கொண்டிருந்தார்கள். எல்லாருக்கும் வேலை இருந்தது. வேலை இல்லாதவர் ஒருவரும் இல்லை. விளக்கு ஏற்றித் தேடினாலும் சோம்பேறி என்பது அந்த ஊரில் கிடையாது.

“இந்த ஊர் எனக்குப் பிடிக்காது.. நான் உழைக்கப் பிறந்தவன் இல்லை” என்றான் பினோஷியோ.

இதற்குள் அவனுக்கு பசி வந்துவிட்டது. கடும் பசி, இருபத்தி நான்கு மணி நேரமாக அவனுக்கு ஆகாரம் இல்லை. கீரை கூட உண்ணவில்லை. என்ன செய்யலாம்?

உணவு தேட இரண்டு வழிகள்தான் உண்டு. ஒன்று வேலை செய்ய வேண்டும். மற்றொன்று ஒரு பைசா அல்லது ஒரு கவளம் சோற்றுக்கு பிச்சை கேட்க வேண்டும்.

பிச்சை எடுப்பது பினோஷியோவிற்கு கேவலமாய் இருந்தது. வயதினாலோ பலக்குறைவினாலோ கதி அற்றவர் மட்டும் இரந்து உண்ணலாமே ஒழிய மற்றவர் இரப்பது இழுக்கு என்று அவனுக்கு அவன் தகப்பனார் அறிவுறுத்தி இருந்தார்.

இந்த உலகில் நல்கூர்ந்தார் என்பவர் தள்ளாமையாலோ வயதினாலோ பீடிக்கப்பட்டு வேலை

செய்ய இயலாதவர் தவிர மற்ற யாரும் தயைக்கும் தானத்திற்கும் பாத்திரம் இல்லை என்பது அவர் கருத்து. ஒவ்வொருவரும் இயன்றது உழைக்க வேண்டும். வேலை செய்ய மறுத்து பசியால் வருந்தினால் அது அவரவர் பிழை.

அந்தச் சமயம் களைத்து இளைத்த ஒரு மனிதன் ஒரு வண்டி நிறைய கரிச்சாக்குகளை அடுக்கி பாதை வழியாய் இழுத்து வந்தான்.

அவன் முகத்தைப் பார்த்தால் நல்லவனாகக் காணப்பட்டான். பிரேஷியோ அவன் பக்கம் போய், வெட்கத்தினால் தலை குனிந்தவண்ணம், மெல்லிய குரலில், "எனக்கு பசிக்கிறது, அரையணா தருமம் கொடுக்க மாட்டாயா?" என்று கேட்டான்.

"அரையணா இல்லை, ஒரு அணா தருகிறேன். என் வீடு வரை என்னோடு இந்த வண்டியை இழுத்து வருவாயா?" என்று சொன்னான்.

கர்வ பங்கம் அடைந்தவன்போல் பிரேஷியோ மனதிற்குள் சீறினான். சிணுங்கிய குரலில், "நீ என்ன சொல்லுகிறாய்? விந்தை பேசுகிறாயே. கழுதைகள் செய்யும் தொழிலை நான் செய்து பழக்கம் இல்லை. இதுவரை நான் வண்டி இழுத்ததும் இல்லை" என்றான்.

"அப்படியானால் சிறுவனே, உனக்குப் பசிக்கிறது என்று நீ சொல்லுவதால், உன் கர்வத்தில் இரண்டு துண்டு வெட்டி வாயில் போட்டு மெல்லு; பசியும் அடங்கும், புளித்த ஏப்பமும் வரும்."

சிறிது நேரம் கழித்து வீடுகட்டும் கொத்தன் ஒருவன் ஒரு கூடை நிறைய சுண்ணாம்புக் கல்லை தோளில் சுமந்து அந்தப் பாதை வழியே வந்தான்.

"ஆகாரம் இல்லாமல் கொட்டாவி விடும் பைய னுககு உணவளிக்க ஒரு அணு கொடுக்கமாட்டீரா?" என்றான், பிநோஷியோ அவனிடம்.

"கட்டாயம் கொடுக்கிறேன். இந்தக் கூடையை என் வீடு வரை தூக்கி வருவாயானால் இரண்டு அணு தருகிறேன்" என்றான்.

"சுண்ணும்பு கனமாக இருககும். எனக்கு ஆயாசப்பட இஷ்டம் இல்லை."

"ஆயாசப்பட இஷ்டமில்லா விட்டால் கொட் டாவி விட்டுக் கொண்டே இரு. பசித்துக கொண்டே இருககும்" என்று சொல்லி அவன் வழி அவன் போனான்.

இன்னும் அரைமணி நேரத்திற்கு இடையில் இருபது பேர்கள் அந்த வழியே போனார்கள். ஒவ் வொருவரிடமும் பிநோஷியோ பிச்சை கேட்டான். ஒவ்வொருவரும், "உனககுப் பிச்சை கேட்க வெட்கமாய் இல்லை? தெருவில் அலைந்து பிச்சை எடுப்பதைவிட எங்காவது உழைத்து உணவு தேடிக் கொள்ளேன்" என்றார்கள்.

கடைசியாக தலையிலும் இடுப்பிலுமாக இரண்டு குடம் ஜலம் எடுத்துக் கொண்டு அழகிய பெண்மணி ஒருத்தி அந்த வழியே வந்தாள்.

"அந்தக் குடத்திலிருந்து குடிக்க எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தரமாட்டாயா? எனக்குத் தாகமாக இருக்கிறது" என்றான் பிநோஷியோ.

குடத்தைக கீழே இறக்கி, "வேண்டிய மட்டும் குடி. ஜலத்திற்குப் பஞ்சமா?" என்றாள் அந்தப் பெண்மணி.

மீன் ஜலம் அருந்துவது போல் பிஞேஷியோ ஜலம் அருந்தி சட்டை நுனியால் வாயைத் துடைத்துக் கொண்டு "தாகம் தீர்ந்தது, பசிக்கிறதே" என்று முனகினன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு அந்தப் பெண் மகள் "இந்தக் குடங்களில் ஒன்றை என் வீடுவரை தூக்கி வருவாயாளுல் உனக்கு ரொட்டி தருகிறேன்" என்ருள்.

பிஞேஷியோ குடங்களைப் பார்த்துத் திகைத்தான். ஆகட்டும் என்றும் சொல்லவில்லை. மாட்டேன் என்றும் சொல்லவில்லை. பதில் சொல்லாமல் நின்ருன்.

"ரொட்டி மட்டும் இல்லை. நெய்யில் தாளித்த தக்காளிக் கூட்டும் தருகிறேன்" என்ருள்.

மறுபடி குடங்களைப் பார்த்தான், ஒன்றும் சொல்லாமல் நின்ருன்.

"அது மட்டும் இல்லை. வேண்டியமட்டும் இனிப்பு பண்டம் தருகிறேன். போளி! பாயசம்! தேன் பாகு" என்ருள்.

பாயசம் தேன்பாகு என்று சொன்னதும் பிஞேஷியோவிற்கு ஆசையை அடக்க முடியவில்லை. மனம் உறுதி அடைந்தவளுய் இணங்கினன்.

"நான் பொறுமை பழகவேணும். குடங்களில் ஒன்றை உன் வீட்டிற்குக் கொண்டு வருகிறேன்" என்ருன்.

குடம் கனமாய் இருந்தது. மரப்பாவை கைகளால் குடத்தைத் தூக்க முடியாமல் தலையில் தூக்கி

தெருவழியாகவைத்து சுமக்க வேண்டி வந்தது. தெரு ஜனங்கள் பார்க்கலாம் என்ற வெட்கத்திலல் கண் களைமூடிக்கொண்டது.

வீட்டை அடைந்த பொழுது மேஜை விரித் திருந்தது. அந்தப் பெண் மகள், பிஞேஷியோவை மேஜை அருகில் உட்கார்த்தி அன்புடன் அடிசில் ஊட்டினுள். வேண்டிய மட்டும் ரொட்டி பறிமாறினுள். ரொட்டிக்கு ருசியாக வெண்ணெய் போளி பறிமாறி னுள்; போளிக்கி முக்கித் தின்ன நெய். இன்னும் இனிப்புப் பண்டங்கள் நிறைய பறிமாறினுள்.

பிஞேஷியோ அன்று சாப்பிடவில்லை. விழுங் கினுன். அவன் வயிறு ஐந்து மாதம் குடி இல்லாத வீடு போல காலியாய் இருந்தது.

அவனுக்கு இருந்த அண்டம் பசி அரை குறை யாய் தீர்ந்த பின்னல் பசிக்கு உணவு அருளிய தயாளுவின் முகத்தைப் பார்க்க தன் முகத்தை உயர்த்தினுன். உயர்த்திய முகத்தை நிமிர்த்தி பார்த்தபொழுது, "ஓ! ஓ! ஓ! ஓ! ஓ!" என்று கத்தின வாய் ஒரு முழு நிமிஷம் முழுதும் மூடவில்லை. கைக்கடிகாரத்தை வைத்து கணக்குப் பார்த்திருந் தாலும் ஒரு முழு நிமிஷமும் அந்த சப்தம் கேட்டிருக்கும்.

கண்கள் திறந்த வண்ணம்; கையில் கிண்ணம் தூக்கியவண்ணம்........வாயில்திண்பண்டம் திணித்த வண்ணம்........வண்ணம்........வண்ணம்; மர மாய் ஸ்தம்பமாய், கல்லாய், தூணமாய்....

"ஆச்சரியத்துடன் என்ன பார்க்கிருய்?" என்றுள் அந்தப் பெண் மகள் சிரித்துக்கொண்டு.

" அதா....அது....அது...உன்னைப் பார்த்தால் தேவதை மாதிரி....தேவதை ஞாபகம்....ஆமாம்

அதே கண்கள்....அதே கூந்தல் ...ஆமாம் உன் கூந்தலும் அவள் கூந்தல் போலவே நீளமாய் இருக்கிறதே....ஐயோ! தேவதையே! நிஜமாகவே நீதானா? நீ தேவதைதானா? இனிமேலும் என்னை அழச் செய்யாதே. நான் எவ்வளவு அழுதேன் என்பது உனக்குத் தெரிந்தால்....ஐயோ நான் எவ்வளவோ கஷ்டங்களுக்கு ஆளானேனே."

இவ்விதம் சொல்லி அந்தத் தேவதையின் கால்களில் விழுந்து அவள் பாதங்களைக் கண்களில் ஒத்திக் கொண்டு கண்ணீரால் நனைத்து "நீ யார் தெரியவில்லையே, யாரென்று சொல்லமாட்டாயா?" என்று விம்மினான்.

3. தேவதையின் அருள்

தேவதைக்கு இந்த நாடகத்தை இன்னும் சிறிது நேரம் நீடிக்க வேண்டும் என்பது எண்ணம். தான் நீலக் கூந்தல் தேவதை இல்லை என்று வாதாடி ஒளித்துப் பார்த்தாள். ஆனல் தான் கண்டு பிடிக்கப்பட்டதையும் இனிமேல் வெகுநேரம் மறைக்க இயலாது :என்பதையும் தெரிந்து கொண்டு கடைசியாக அவள் தேவதைதான் என்பதை ஒப்புக் கொண்டாள்.

“அட பயலே! எப்படியடா என்னை இனம் கண்டாய்?” என்றாள்.

“ உன்பேரில் எனக்கு இருக்கும் அன்புதான் சொல்லிக் கொடுத்தது” என்றான் பினேஷியோ.

“ உனக்கு நினைவு இருக்கிறதா? நீ என்னை விட்டுப் பிரியும் போது நான் குழந்தைப் பருவம். இப்பொழுது யுவதி. உன் தாயாய் இருக்கும் வயதை அடைந்து விட்டேன்.”

“ உன்னைத் தங்கை என்று அழைப்பதற்குப் பதில் தாய் என்று அழைக்க என் மனதின் ஆற்றல் உனக்குத் தெரியுமா? மற்றப் பையன்களைப் போல எனக்கும் தாய் வேண்டும் என்று எவ்வளவு நாட்கள் கதறி இருக்கிறேன்....ஆனால் உனக்கு எப்படி இவ்வளவு சீக்கிரம் வயதாகி விட்டது?”

“ அது ஒரு ரகசியம்.”

“ அந்த ரகசியத்தை எனக்குக் கற்றுக் கொடு. எனக்கும் வயதாக வேண்டும் போல் ஆசையாய் இருக்கிறது. என்றுமே நான் இளமையாய் இருக்கிறேனே!”

“ உனக்கு வயதாக முடியாது.”

“ ஏன்?”

“ நீ ஒரு மரப்பாவை. மரப்பாவைகளுக்கு வயது கிடையாது. அவர்கள் மரப்பாவையாய் பிறந்து மரப்பாவையாய் வளர்ந்து, மரப்பாவையாய் மாள்வார்கள்.”

“நான் மரப்பாவையாய் வாழ்ந்த நாள் போதும்” என்றான் பினேஷியோ தலையில் அடித்துக் கொண்டு. “ நான் மனிதன் ஆகவேண்டும்.”

“மனிதன் ஆகவேண்டுமானால் அதற்குள்ள சீலம் பயிலவேண்டும். அதற்குரிய தகுதிக்கு பாடு படுவாயானால் நீ மனிதன் ஆகலாம்.”

“நிஜமாகவா! அந்தத்தகுதிக்கு என்ன பாடுபட வேண்டும்?”

“நீ நல்ல பையனாக ஆக வேண்டும்.”

“இப்பொழுது நான் நல்ல பையன் இல்லை என்பது உன் எண்ணமா?”

“இல்லை என்பது மட்டும் இல்லை. நேர்மாறாக நீ ஒரு கெட்ட பையன். நல்ல பையன்கள் கீழ்ப்படிதலாக இருப்பார்கள்.”

“என்னிடம் கீழ்ப்படிதல் இல்லை.”

“நல்ல பையன்கள் ஒழுங்காகவும் உழைத்தும் படிப்பார்கள்.”

“நான் வருஷம் முழுவதும் தெருவில் திரிந்து வீண் பொழுது கழிக்கிறேன்.”

“நல்ல பையன்கள் எப்பொழுதும் உண்மை பேசுவார்கள்.”

“நான் எப்பொழுதும் பொய்யே பேசுகிறேன்.”

“நல்ல பையன்கள் தவறாமல் பள்ளிக்கூடம் போவார்கள்.”

“பள்ளிக்கூடம் என்றால் எனக்கு உடம்பு வலிக்கிறது. ஆனால் இன்று முதல் நான் நல்ல பையனாய் நடக்கிறேன்.”

“உறுதி சொல்கிறாயா, வாக்களிக்கிறாயா?”

"நான் உறுதி சொல்கிறேன், வாக்களிக்கிறேன். இனிமேல் உனக்கும் நான் நல்ல பையனாய் இருந்து என் தகப்பனுருக்கு உதவியாயும் ஊன்று கோலாயும் இருந்து....என் தகப்பனர் இப்பொழுது எங்கே இருக்கிருர் ?"

"எனக்குத் தெரியாது."

"என்ருவது இனி அவரைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா ?"

"கிடைக்கும் என்று நினைக்கிறேன். கிடைக்கும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

இந்த பதிலைக் கேட்டவுடன் பினேஷியோவிற்கு சந்தோஷம் வந்து விட்டது. தேவதையின் மலர்க் கரங்களை தன் மரக்கரங்களால் பற்றி, முகத்துடன் ஒற்றி ஆர்வத்தினல் பூரித்தான்.

முகத்தை உயரே நிமிர்த்தி தேவதையை அன்புடன் பார்த்துக் கேட்டான்: "அப்பொழுது, தாயே! நீ இறக்கவில்லை என்பது உண்மை என்று சொல்" என்ருன்.

"இறக்கவில்லை என்று தான் தோன்றுகிறது" என்று பதிலளித்தாள் தேவதை சிரித்துக் கொண்டு.

"உன் சிலுவைக்கல்லில் நீ இறந்து விட்டாய் என்று பொறித்திருந்த எழுத்துக்களை நான் வாசித்த பொழுது என் தொண்டையில் அந்த வார்த்தைகள் சிக்கிக் கொண்டதை நீ கூட இருந்து பார்த்தாயால்...."

"பார்த்தேன்! பார்த்தேன்! அதனல் தான் உன்னை மன்னித்து மறுபடியும் உன் அண்டை இருக்

கிறேன். நீ உண்மையுடன் அழுதபொழுது நீ சுத்த மனம் உடையவன் என்று அறிந்து கொண்டேன். தெய்வம் சுத்தமனதின் ரூபம் என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனதால் யாரிடம் என்ன குறை இருந்தாலும் எவ்விதக் கெடுதல்களுக்கு அவர்கள் ஆளானாலும் அந்த சுத்தமனது அவர்களை உள் நின்று சீர்திருத்தி ஆட்கொள்ளும் என்பது எனக்குத் தெரியும். ஆனதால் நீயும் திருந்துவாய், உன்னையும் நல்ல வழிக்குக் கொண்டு வரலாம் என்ற நினைப்பில் நான் மறுபடி உன்னிடம் வந்தேன். இனி மேல் நான்தான் உனக்குத் தாயார்."

"ஐயோ, அம்மா" என்றான் சந்தோஷத்துடன் குதித்து, தன் ஆயுளில் தாயைப் பெற்ற உவகையில்.

"இனிமேல் நான் சொன்னபடி எல்லாம் நடந்து கீழ்படிதலாய் இருக்க வேண்டும்."

"ஆகட்டும், ஆகட்டும், ஆகட்டும் மும்முறையும் ஆகட்டும்."

"நாளை முதல் நீ பள்ளிக்கூடம் போக வேண்டும்."

பினேஷியோவின் முகத்தில் சந்தோஷம் குறைந்தது.

"அடுத்தபடியாக உனக்குப் பிடித்ததாக 'ஒரு தொழில் அல்லது ஒரு கலை பயில வேணும்."

பினேஷியோவின் முகம் சந்தோஷம் இழந்தது.

"வாய்க்குள் என்ன முனகுகிறாய்?" என்றாள் தேவதை கோபத்துடன்.

"பள்ளிக்கூடம் போக எனக்கு வயது கடந்துவிட்டதே என்று சொல்லிக் கொள்கிறேன்" என்றான் பினோஷியோ சிணுங்கிய குரலில் கண்ணை கசக்கிக் கொண்டு.

"பள்ளிக்கூடம் போவதற்கும் அறிவை வளர்ப்பதற்கும் வயது என்பதே கிடையாது. இதை நீ மனதிற் கொள்ள வேண்டும்."

"ஆனால் நான் தொழிலோ கலையோ கற்றுப்பயன் இல்லை."

"ஏன்?"

"எனக்கு உழைக்க மனம் இல்லை. உழைப்பு ஆயாசம் தருகிறது."

"சிறுவனே, இந்த முறையில் பேசுபவர்கள் கடைசியில் சிறைச்சாலையிலோ, மருத்துவ இல்லத்

திலோ வாழ்வை முடிப்பார்கள் என்பது திண்ணம். இதை நீ உணர வேண்டும். ஒரு விஷயம் சொல்லு கிறேன். கேள். இந்த உலகில் யாராஞலும் சரி, ஏழையாஞலும், பணக்காரன் ஆஞலும், பிறவி எய்தி யதின் காரணத்திஞலேயே, உழைக்க கட்டுப்பட் டிருக்கிருர்கள். உழையாமல் வாழவேண்டுமென்று நினைத்தாலும் உலகின் போக்கு அவர்களை உழைக் கச் செய்யும். சுக வாழ்வு என்பது பொய்க் கனவு. உலகைப் போய் சுற்றிப்பார். ஒரு பொருளும் சும்மாய் இல்லை. நிலையான சூரியனும் ஏதோ ஒரு ஆணைக்கு உட்பட்டு உலகைச் சுற்றி வருவதை உணர் வாய். அது பீதியினல் உதிக்கிறது என்று வேத நூல் முறையிடுகிறது. ஆதலால் சோம்பல் எண்ணங்களை விட்டு, நியதிக்கு அடங்க உணர்ந்து கடைத்தேற வழி தேடு. இளமையில் கற்று அறிந்தது தான் முதுமை யில் பயன் கொடுக்கும், காலத்தை வீணுக்காதே" என்ருள்.

இந்த அன்பு மொழிகள் பினேஷியோவின் மனதில் பதிந்தது. தேவதையை கைகூப்பி வணங்கி, "இனி படிக்கிறேன். இனி உழைக்கிறேன். இனி நீ சொல்வதெல்லாம் கேட்கிறேன். ஜடமான இந்த மரப் பொருளை விட்டு ஜீவிதமான நிஜப் பையஞக மாற வேண்டும் என்ற எண்ணத்திற்கு நீ உதவி புரிவதாகச் சொன்னது நான் பொன்னே போல் போற்றும் நினைவு. எனக்கு உன் உதவி வேண்டும்" என்று நமஸ்கரித்தான்.

"உதவி செய்கிறேன். ஆஞலும் நீயும் உனக்கே உதவி செய்ய வேணும்" என்ருள் தேவதை.

4. பள்ளியில் மதிப்பு

மறுநாட் காலை பினோஷியோ பாலர் பள்ளிக் கூடம் சென்றான்.

ஒரு மரப்பாவை பள்ளிக்கூடத்திற்குள் நடந்து வருவதை பார்த்தபொழுது அங்கு உள்ள சிறுவர்கள் அடைந்த குறும்பிற்கும் குதூகலத்திற்கும் எல்லை உண்டு என்று நினைக்கிறீர்களா! அவன் உள்ளே வந்ததும் அவர்கள் எல்லாரும் முடிவில்லாத சிரிப்பொலி சிரித்தனர். அளவில்லாத குறும்புகள் செய்தனர். ஒருவன் அவன் குல்லாவை இழுத்தான்.

இன்னொருவன் பின்னே நின்று அவன் சட்டையை இழுத்தான். மற்றொருவன் மைக் கூட்டில் இருந்து மையை முக்கி, அவன் மூக்கின் கீழ் மை மீசை தீட்டினான். வேறு ஒருவன் அவன் கால்களிலும், கைகளிலும் கயறு கோர்த்து அவனை பொம்மலாட்டம் நடிக்க முற்பட்டான்.

சில நாட்கள் பினோஷியோ இதை ஒன்றும் பொருட்படுத்தாது பொறுமையாய் இருந்து பார்த்தான். முடிவில் பொறுமை இழந்து, குறும்பு செய்வதில் முதன்மையாய் இருந்த பையன்களை நோக்கி, "கவனமாய் இருங்கள். உங்கள் சிரிப்பிற்கும் குறும்பிற்கும் கோமாளியாய் நான் இங்கு வரவில்லை. மரியாதை கொடுத்து மரியாதை வாங்க வேண்டும்" என்றான்.

வந்தது அமளி. யாரோ ஒருவன் "பாரடா இங்கு. பாடப் புத்தகம் போல் பேசுகிறான். நெஞ்சைக் கீறி புஸ்தகம் ஒளிந்து இருக்கிறதா பார்ப்போம்" என்றான். எல்லோரும் ஊளையிட்டுச் சிரித்து பினோஷியோவை வளைத்தனர். எல்லாரினும் துடுக்கான ஒருவன் மரப்பாவையின் மூக்கைப் பிடிக்கும் வேளை. ஐயோ! அவன் கால் முட்டுகள் இரண்டிலும் ஒரு உதை விழுந்தது. அவன் சுருண்டு விழுந்தான். பினோஷியோ உட்கார்ந்திருந்த மேஜையின் கீழ் இருந்த கால்கள் கொடுத்த உதை அது.

"மரக்கால்களா! கல் கால்களா!" என்று கதறினான் அந்தப் பையன் தன் முழங் கால்களை கையால் தடவிக் கொண்டு.

"என்ன தோள்கள்?" என்றான் மற்றொருவன். "கால்களை விட கடினம் போல் இருக்கிறதே"

என்றுன், அவன் செய்த குறும்புக்காக பினேஷி யோவின் தோள்களால் இடியுண்ட மற்றெருவன்.

இவ்விதம் நிகழ்த்திய கால்வண்ணமும் தோள் வண்ணமும் அந்தப் பள்ளிச் சிறுர்களின் நன்மதிப் பையும் அநுதாபத்தையும் பினேஷியோவிற்கு சம் பாதித்துக் கொடுத்தது. ஒவ்வொருவரும் அவனை சிநேகம் செய்துகொள்ள முன் வந்தார்கள். எல் லோருக்கும் அவனைப் பிடித்தது.

ஆசிரியரும் அவனைப் புகழ்ந்தார். ஒழுங்காக வும் கவனத்துடனும் முயற்சி எடுத்து பினேஷியோ பாடங்களைப் படித்தான். பள்ளிக்கூடத்திற்கு முதலில் வருவான். கடைசியாகப் போவான்.

ஆனல் அவனிடம் ஒரு குற்றம் இருந்தது. எல்லாருக்கும் வேண்டியவனுய் விட்டான். ஆகவே பள்ளிக்கூடத்தில் குறும்புக்கார பையன்களுக்கும் அவன் வேண்டியவனுய் விட்டான்.

ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடத்தில் பினேஷி யோவிடம், "நீ இன்ன இன்ன பையன்களுடன்

சேராதே" என்று முறை இடுவர். வீட்டில் தேவதையும் பினேஷியோவைக் கூப்பிட்டு "பினேஷியோ, பத்திரமாய் இரு. இந்தக் கெட்ட பையன்கள் ஒரு நாள் உன்னைக் கெடுத்து விடுவார்கள். உன் படிப்பும் போய் உன்னைப் பெரிய கஷ்டத்திற்கும் ஆளாக்குவார்கள்" என்பாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அந்தப் பயம் உனக்கு வேண்டாம்" என்பான் பினேஷியோ தோள்களைக் குலுக்கிக் கொண்டு. தன் முன்னெற்றியைத் தொட்டுக் காட்டி "அதற்கு உரிய மூளை இங்கு இல்லாமல் இல்லை" என்பான். இதைப் பார்த்து தாயார் பெருமிதம் அடைவாள்.

ஒரு நாள் பினேஷியோ பள்ளிக்கூடம் போகும் பொழுது, வழியில் சில நண்பர்கள் ஓடோடியும் வந்து, "ஒரு பெரிய சமாசாரம் கேட்டாயா? நாங்கள் போகிறோம்" என்றார்கள்.

"என்ன சேதி?" என்றான் பினேஷியோ.

"இந்த ஊர்க் கடற்கரையில் மலைபோல பெரிய ஒரு திமிங்கிலம் வந்து இருக்கிறதாம். நாங்கள் பார்க்கப் போகிறோம்" என்றார்கள்.

"நிஜமாகவா! ஒருவேளை என் தகப்பனார் மூழ்கி இறந்தபொழுது அருகில் இருந்த திமிங்கிலமாக இருக்குமோ?"

"நாங்கள் அதைத்தான் பார்க்கப் போகிறோம். நீயும் வருகிறாயா?"

"இல்லை! எனக்குப் பள்ளிக்கூடம் போக வேணும்!"

"பள்ளிக்கூடம் கிடக்குடா, பள்ளிக்கூடம்! என்றைக்கு வேணுமானுலும் போய்க் கொள்ளலாம். ஒரு பாடம் கூடப் படித்தாலும் ஒரு பாடம் குறையப் படித்தாலும் நம்ம களிமண் மூளைக்கு எல்லாம் ஒன்று தான். திமிங்கிலம் தினம் வருமா ?"

"வாத்தியார் குற்றம் சொல்லமாட்டாரா ?"

"அவர் சொல்லுகிறதைச் சொல்லட்டுமே. அவர் சொல்லிக் கொண்டே இருப்பார். அதற்குத் தானே அவர் சம்பளம் வாங்குகிறுர்."

"தாயார் என்ன சொல்லுவாளே!"

"தாயார்! அவளுக்கு என்னடா தெரியும்?" என்றுர்கள் அந்த இளம் சிறுவர்கள்.

"நான் என்ன செய்யப் போகிறேன் தெரியுமா? எனக்கும் திமிங்கிலத்தைப் பார்ப்பதில் காரியம் இருக் கிறது. ஆனுல் நான் பள்ளிக்கூடம் கலைந்த பின் சாயங்காலம் போய்ப் பார்ப்பேன்" என்றுன்.

"அட முட்டாள்" என்றுன் கூட்டத்தில் இருந்த ஒரு பையன். "அவ்வளவு பெரிய மீன் உன் சௌகரி யத்தை எதிர்பார்த்து காத்திருக்குமாடா! அதற்கு தோன்றிய போது இங்கு இருக்கும். திடீரென்று புறப்பட்டு வேறு இடத்திற்குப் போகும். அப்புறம் பார்க்க முடியுமா ?........"

"இங்கிருந்து கடற்கரைக்குப் போய் வர எவ்வளவு நேரம் பிடிக்கும்."

"ஒரு மணி நேரத்தில் திரும்பி விடலாம்."

" எல்லோரும் ஓடுவோம். யார் முதலில் போய்ச் சேருவார்களோ அவர்கள் தான் முதல்" என்றான் பினேஷியோ.

எல்லோரும் வரிசையாய் நின்றார்கள். ஒன்று! இரண்டு!! மூன்று!!! என்றான் ஒரு பையன். எல்லாப் புஸ்தகங்களையும் நோட்டுப் புஸ்தகங்களையும் தோள் பையில் தொங்க விட்டுக் கொண்டு வயல்களின் ஊடே ஓடினார்கள். எல்லாரிலும் எப்போதும் பினேஷியோதான் முதல். கடற்கரையையும் அவன் தான் முதலில் அடைந்தான்.

ஓடும்பொழுது ஊடே ஊடே நின்று, திரும்பிப் பார்த்து, எய்த்து, இளைத்து நாக்கைத் தொங்க விட்டு புழுதி மூடி ஓடி வரும் பையன்களைப் பார்த்து கேலி செய்து சிரிப்பான். இளம் சிறுவன்! அவனுக்கு என்ன தெரியும்? இன்னும் ஆயுளில் படவேண்டிய கஷ்டங்களையும் அனுபவிக்கவேண்டிய பயங்கரங்களையும் அவன் அறிந்தானா?



5. தோழர் கோபம்

கடற்கரையை அடைந்தபொழுது, திமிங்கிலம் அங்கு இல்லை. சமுத்திரத்தை நோக்கிப் பார்த்தான் பினோஷியோ. சமுத்திரம் அலை அடங்கி பளிங்குபோல் பரந்து கிடந்தது.

"திமிங்கிலம் எங்கே?" என்றான், தன் சிநேகிதர்கள் பக்கம் திரும்பி பினோஷியோ.

"ஒரு வேளை உணவருந்தப் போய் இருக்கும்" என்றான் ஒருவன், குறும்பாகச் சிரித்துக்கொண்டு.

"ஒரு வேளை சயனக் கிருஹத்தில் சயனிக்கப் போய் இருக்கும்" என்றான் மற்றொருவன், முன்னவனிலும் இரைந்து சிரித்து.

அவர்கள் கேலிச் சிரிப்பினாலும் குறும்புப் பதில்களிலிருந்தும் பினோஷியோ ஒன்று உணர்ந்துகொண்டான். அவர்கள் சொன்னதும் செய்ததும்

பொய். தன்னை ஏமாற்றி சூழ்ச்சி செய்து கடற் கரைக்குக் கூட்டி வந்து ஏளனம் செய்கிறார்கள் என்பது வெளிப்படையாயிற்று. அவனுக்குக் கோபம் வந்தது.

“திமிங்கிலம் வந்திருப்பதாகப் பொய் சொல்லி என்னை ஏமாற்றி கூட்டி வந்ததால் என்ன லாபம் அடைந்தீர்கள்?” என்றான் சினத்துடன் பிஜேஷியோ.

“ஏமாற்று இல்லை! விளையாட்டு” என்றார்கள், எல்லோரும் ஒருங்கே சேர்ந்து.

“என்ன விளையாட்டு?”

“பள்ளிக்கூடம் போகாமல் உன்னைத் தடுத்து எங்களுடன் வரச்செய்வதுதான். ஒன்றுபோல் தினம் பள்ளிக்கூடம் போவதும் ஒழுங்காகப் பாடங் களைப் படிப்பதும் உனக்கு வெட்கமாய் இல்லை! இப்படி இரவு பகலாகப் படிப்பது உனக்கு வெட்க மாய் இல்லை?”

“அப்படி நான் படித்தால் உங்களுக்கு என்ன? அதனால் உங்களுக்கு என்ன கெடுதல்?”.

“கெடுதலா! நீ பாடம் படித்து வருவதால் எங்களுக்குப் பள்ளிக்கூடத்தில் பெயர் கெட்டுப் போகிறது.”

“எப்படி?”

“படிக்கிற பையன்கள் பாடம் படிப்பதால் படியாத பையன்களுக்கு பாடம் தெரியாமல் போகிறது. அதனால் எங்களுக்கு வெட்கம் ஏற்படு கிறது. எங்களுக்கு மானம் அவமானம் என்பது இல்லையா?”

" அதற்கு நான் என்ன செய்யவேண்டும் ?"

" அதற்கு எங்களைப்போல் நீயும் ஒழுகவேணும். பள்ளிக்கூடம் போகக்கூடாது. ஆசிரியர் சொல்லைக் கேட்கக்கூடாது. இந்த மூன்றும் எங்களுக்குப் பரம விரோதிகள்."

" ராப்பகலாய் நான் படிக்கத்தான் செய்வேன் என்று வைத்துக்கொண்டால் ?"

" நீ எங்களுக்குப் பரமவிரோதி. அப்புறம் உனக்கும் எங்களுக்கும் சிநேகம் விட்டுப் போகும். எப்படியடா பழி வாங்குவது என்று காத்திருப்போம்."

" உங்கள் மடத்தனத்திற்கு நான் சிரித்தால் ?" என்றான் பிஞேஷியோ தலையை அசைத்துக் கொண்டு.

உடனே அங்கு இருந்தவர்களில் பெரிய பையன் ஒருவன் பிஞேஷியோவின் முன் வந்து நின்று, " இதோ பார், பிஞேஷியோ! உன் பெருமை எல்லாம் எங்களிடம் நடக்காது. நாங்கள் உனக்குப் பணிவதாய் இல்லை. உனக்கு எங்கள் சிநேகம் வேண்டாவிட்டால் எங்களுக்கும் உன் சிநேகம் வேண்டாம். ஞாபகம் வைத்துக்கொள். நீ ஒருவன். நாங்கள் ஆறுபேர்" என்றான்.

" ஆறு பகை" என்றான் பிஞேஷியோ உரக்கச் சிரித்து.

" இதைப் பாரடா ! நம்மைப் பகை என்கிறான். அவனே பகை என்று சொல்லிவிட்டான். நாமும் பகைவர் ஆய்விடுவோம். வா ! சண்டைக்கு."

"பினேஷியோ! மன்னிப்புக் கேள். இல்லா விட்டால் கெட்டுப் போவாய்."

"கொக்கூ!" என்ருன் பினேஷியோ தன் ஆள்காட்டி விரலை மூக்கில் வைத்து வளைத்துக் காட்டி.

"பினேஷியோ! இது விளையாட்டு இல்லை. கெடுதல் வரும்."

"கொக்கூகூ."

"கழுதை மாதிரி உதை படுவாய்."

"கொக்கூகூகூ."

"வீட்டிற்குப் போகும் முன் மூக்கு உடைந்து சில்லாய் பொறுக்குவாய்."

"கொக்கூகூகூகூ."

அங்கிருந்தவர்களில் தைரியமான ஒரு பையன் முன் வந்து "கொக்கூ....வா உனக்கும் கொக்கூ. உன் அப்பனுக்கும் கொக்கூ, நீ தொங்கிய ஆலமரத் திற்கும் கொக்கூ, ஆரம்பத்திற்கு இதை வாங்கிக் கொள். இரவு உணவிற்கு உதவும்" என்று சொல்லி தன் கையை மடக்கி, பினேஷியோ தலையில் பலமாக ஒரு குட்டு குட்டினன்.

கொடுத்தால் வாங்க வேண்டாமா, பண்ட மாற்றுத்தானே? பினேஷியோ சளைக்காமல் ஒன் றுக்கு நாலாய் திரும்பக் கொடுத்தான். சண்டை பலத்தது. பரவிற்று.

பினேஷியோ ஒருவன் ஆனபோதிலும் வீரன் போல போராடினன். அவன் கால்கள் வயிரம் பாய்ந்த மரத்திஞல் மறுமுறை அவன் தகப்பனர்

செய்து கொடுத்தது உங்களுக்கு நினைவு இருக்கும். அந்தக் கால்கள் இப்போது பிஞேஷியோவிற்கு உதவின. அவன் விரோதிகள் யாரும் கிட்டே வரத் துணியாமல் பயந்து தூரத்தில் நின்றார்கள். பிஞேஷியோவின் கால்கள் பட்ட இடமெல்லாம் விரோதிகள் உடம்பில் இந்தச் சண்டையின் ஞாபகார்த்தமாக பிற்காலத்தில் வடுக்கள் தெரிந்தன.

நெருங்கிய கைச்சண்டை போராட்டத்தில் வெற்றி காண்பதற்கு இடம் அன்னியில் போகவே, எல்லாப் பையன்களுக்கும் ஆவேசம் வந்து யுத்த தளவாடங்கள் தேடப் புறப்பட்டனர்.

அவர் அவர் தோளில் கிடந்த பைகளைத் திறந்து, அவைகளில் இருந்து ஒவ்வொன்றாய் பூகோளம், இலக்கணம், தரும சாஸ்திரம், நிகண்டு இவைகளில் கனமான புத்தகங்கள் எது எது இருந்ததோ, கைக்கு வந்ததோ, அவைகள் பிஞேஷியோவின் தலையை நோக்கிப் பறந்தன. பிஞேஷியோவின் கண்கள் கூர்மையான கண்கள். ஆதலால், அந்த அந்த அவசரப்படி அவன் குனிந்து சாய்ந்து, நிமிர்ந்தான். புஸ்தகங்களெல்லாம் அவன் தலைமேல் பறந்து சமுத்திரத்தில் விழுந்தன. ஒன்றாவது அவன் மேல் படவில்லை.

மீன்கள் அடைந்த குதூகலத்தையும் கோலாகலத்தையும் என்ன சொல்வது! கடலில் விழுந்த புஸ்தகங்கள் எல்லாம் தங்களுக்கு உணவு என்று நினைத்து பேரன், பேத்தி, குஞ்சு குழந்தைகளுடன் கரையோரம் கும்பல் கும்பலாய் வந்தன. ஒன்று இரண்டு பக்கங்கள் அல்லது முகப்புப்படம் ஏதாவது தின்றபின் அந்த உணவு ருசி இல்லாமல், "சீ! சீ! இது செவிக்கு உணவு! கல்வி கற்கும் அசடர்க்கு

உரியது. ருசியுள்ள உணவிற்கு வேறு இடம் போவோம்" என்று பேரன் பேத்திகளை சமாதானப் படுத்தி வேறு இரை தேடிச் சென்றன.

இதற்குள் சண்டையின் மும்முரம் மூர்க்கமாய் விட்டது.

அந்த சமயம் ஒரு பெரிய கடல் நண்டு ஜலத்தி லிருந்து மணல் ஓரமாக மெதுவாக நடந்து வந்து ஜல தோஷத்தினால் தொண்டை கட்டினதால் மத்தளம் போன்ற தொனியில், "சண்டையை நிறுத்துங்கள், முரட்டுப் பயல்களா! நீங்கள் முரடர்கள் தவிர வேறில்லை. இவ்வித கைச்சண்டைகள் நன்மைக் கில்லை. ஏதாவது அபாயம் நேரிடும்" என்றது.

ஆனால் நண்டின் வார்த்தையை யார் கேட்கிறார் கள்? பிளேஷியோ கூட நண்டைக் கவனிக்கவில்லை. நண்டைப் பார்த்து, "கிழட்டு நண்டே, வாயை மூடிக் கொண்டு இரு. உனக்குத் தொண்டை கட்டி ஜலதோஷம் பிடித்திருந்தால் வைத்தியரிடம் போய் மருந்து சாப்பிடு, அல்லது அதைவிட நல்ல யோசனை யாக படுக்கையில் படுத்து போர்வையை இழுத்துப் போர்த்துக்கொள்" என்றான் கேலியாக.

இதற்குள் அந்தப் பையன்களிடம் இருந்த யுத்த தளவாட புத்தகங்கள் அற்றுப் போயின. சற்று தூரத்தில் பிளேஷியோவின் புஸ்தகங்கள் அடங்கிய பை கிடப்பதைப் பார்த்து ஓடிப்போய் அதைக் கைப்பற்றினர்கள். எதிரியின் தளவாடங்களை கைப் பற்றுவது தரும யுத்தத்தில் ஒரு முறை.

அந்தப் புஸ்தகங்களில் பெரிய புஸ்தகமாக ஒன்று இருந்தது. தோல் பைண்டு கனத்த அட்டை

யுள்ளது. அது கணித புஸ்தகம். கணிதம் கடினமா இல்லையா நீங்களே சொல்லுங்கள்?

அந்தக் கடினமான கணித புஸ்தகத்தை சிறுவரில் ஒருவன் இருகைகளாலும் தூக்கி பிளேஷியோவின் தலையைக் குறிவைத்து முழு பலத்தாலும் எறிந்தான். அந்தப் புஸ்தகம் பிளேஷியோவின் தலையில் படாமல் அங்கு நின்ற மற்றொருவன் நெற்றியில் பட்டு, ஐயோ! அவன் வெள்ளைத் துணிபோல் வெளுத்து, "அம்மா நான் இந்த மணலில் சாகிறேன்" என்று கதறி பூமியில் சாய்ந்தான். அவன் கூட வந்த பையன்கள், அவன் இறந்ததாக நினைத்து, கால்கள் ஓடும் மட்டும் ஓடி சில நிமிஷங்களில் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தனர்.

பிளேஷியோ ஓடவில்லை. நின்றான். துக்கத்தினாலும் பயத்தினாலும் அவனும் இறந்தது போலவே இருந்தாலும் ஓடிப்போய் தன் கைக்குட்டையை உப்பு நீரில் அமிழ்த்தி தன் நண்பனின் நெற்றியில் ஒத்தி தெளித்து தனக்குத் தெரிந்த ஆரம்ப சிகிச்சை செய்தான். மனதில் வெந்துயரம் கொண்டு, அவனைப் பெயர் சொல்லி கூப்பிட்டு "யூஜீன்....ஐயோ யூஜீன் உன் கண்களைத் திறந்து என்னைப்பார். ஏன் பதில் பேசாமல் இருக்கிறாய்? புஸ்தகத்தை நான் எறியவில்லை. என்னை நம்பு. நான் இல்லை....யூஜீன்.... கண்ணைத்திற....நீ கண்ணை மூடிக் கொண்டிருந்தால் நானும் செத்துப் போவேன். ஐயோ நான் என்ன செய்வேன்? நான் எப்படி வீட்டிற்குப் போவேன்? என் அம்மாவிடம் போய் நான் நடந்ததை எப்படிச் சொல்லுவேன்? அவள் என்னை நம்புவாளா? நான் எங்கு ஓடலாம்? ஐயோ நான் மட்டும் பள்ளிக்கூடம் போய் இருந்தால் எவ்வளவோ நன்றாய் இருந்திருக்

குமே! என் நண்பர்கள் சொன்னதை நான் ஏன் கேட்டேன்? அவர்களால் நான் கெட்டேன். ஆசிரியர் சொன்னாரே அம்மாவும் சொன்னாளே 'கெட்ட பையன்களுடன் சேராதே' என்று. நான் ஒரு பிடிவாதம் பிடித்தவன். முழு முட்டாள். முதலில் அவர்கள் பேசுவதைக் கேட்கிறேன். அப்புறம் புத்தி இழக்கிறேன். எனக்கு வேணும். ஐயோ நான் பூமியில் பிறந்தது முதல் அரைமணி நேரம் சந்தோஷமாக வாழக் கொடுத்து வைக்கவில்லையே, ஐயோ நான் என்ன செய்வேன்? எங்கு போவேன்? எங்கு போவேன்?" என்று அழுதான்.

தன் தலையில் டொக், டொக் என்று அடித்துக் கொண்டு தேம்பித்தேம்பி அழுது யூஜீன், யூஜீன் என்று கத்தும்போது மனிதர் காலடிச் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். அங்கு இரண்டு ஊர் காப்பாளர்கள் நின்றார்கள்.

"இங்கு மணலில் படுத்து என்ன செய்கிறாய்?" என்று அவர்கள் கேட்டார்கள்.

"என் சிநேகிதனுக்கு உதவி செய்கிறேன்" என்றான் பினோகியோ.

"அவனுக்கு காயம் ஏற்பட்டிருக்கிறதா?"

"அப்படித்தான் தோன்றுகிறது."

"நிஜமாகவே காயம் ஏற்பட்டிருக்கிறதே. இதோ தலையில் நெற்றிப்பக்கம் ரத்தக்காயம். இது யார் செய்தது?" என்றான் ஊர் காப்பாளனில் ஒருவன், குனிந்து யூஜீனைக் கவனித்துப் பார்த்து.

"நான் இல்லை" என்றான் பினோகியோ மூச்சுத் திணறி, வாயும் உளறி.

" நீ இல்லை என்றால் யார் செய்தது?"

"நான் இல்லை" என்றான் பிஞேஷியோ மறு படியும்.

" இந்தக் காயம் எதனால் ஏற்பட்டது?"

" இந்தப் புஸ்தகத்தை எறிந்ததால்" என்று சொல்லி அந்த மரப்பாவை கனத்த அட்டைபோட்டு தோல் பைண்டு செய்த அந்தக் கடினமான கணித புஸ்தகத்தை இரு கைகளாலும் தூக்கி ஊர்காப்பாள னிடம் காட்டியது.

" இந்த புஸ்தகம் யாருடையது?"

" என்னுடையது."

" சரி, அது போதும். வேறு சான்று அவசியம் இல்லை. எழுந்திருந்து எங்களுடன் வா" என்றான்.

" ஆனால் நான்...."

" எங்கள் கூடாவா."

" நான் நிரபராதி."

" எங்கள் கூடவா."

ஊர்காப்பாளர்கள் அந்த இடத்தை விட்டு போகும் முன், கரை ஓரமாக படகு ஓட்டி வந்த சில செம்படவர்களைக் கூப்பிட்டு, அவர்களிடம் " காயம் பட்டிருக்கும் இந்தச் சிறுவனை உங்கள் வசம் ஒப்படைக்கிறோம். உங்கள் வீட்டிற்குக் கொண்டு போய் அவனுக்கு சிகிச்சை செய்யுங்கள். நாளை காலை நாங்கள் வந்து அவனைக் கொண்டு போகி றோம்" என்று சொன்னார்கள். பிறகு பினோஷியோ

பக்கம் திரும்பி "முன்னால் நட, வேகமாய் நட; உதை படுவாய்" என்று அதட்டினர்.

மறுமுறை பயமுறுத்துவதற்குப் பயந்து அந்த ஊர்க்காப்பாளர் மத்தியில் பினோஷியோ நடந்தான். அவன் புத்தி வேகமாய் வேலை செய்ய ஆரம்பித்தது. எங்கு இருக்கிறோம். என்ன செய்கிறோம் என்பது

அவனுக்குத் தெரியவில்லை. கனவு காண்பதாகவே நினைத்தான். என்ன பயங்கரமான கனவு! அவனுக்குத் தன் உணர்ச்சி இல்லை. பார்த்த பொருளெல்லாம் இரண்டாய் கண்களுக்குத் தெரிந்தன. கால்கள் ஆடின. நாக்கு மேல் அண்ணத்தில் ஒட்டியது. ஒரு வார்த்தை பேசமுடியவில்லை. இந்தத் திகிலுக்கும் நெஞ்சத் துயரத்துக்கும் நடுவில் ஒரு எண்ணம் மட்டும் அவன் மனத்தை முள்போல் குத்தி ரம்பம் போல் அறுத்தது. அது தேவதையின் நினைவு. ஊர்காப்பாளர் மத்தியில் தெருவழியாய்த் தான் போகும்போது: "தேவதை தெருவாசலில் நின்று பார்ப்பாளோ? பார்த்தால்! இதைவிடச் சாகலாம்."

இப்படி நினைவு ஓடிக்கொண்டிருக்கும் மத்தியில் ஊர் வந்தது. குப் என்று ஒரு காற்று அடித்து, பினோஷியோவின் குல்லாவை அவன் தலையில் இருந்து தூக்கி, பத்து அடி தள்ளிக்கொண்டு போட்டது.

"நான் போய்க் குல்லாவை எடுத்து வரலாமா?" என்றான் பினோஷியோ ஊர் காப்பாளரைப்பார்த்து, நளினமாக.

"ஓடு! போ! சீக்கிரம் எடுத்து வா!" என்றான் ஊர்காப்பாளர்களில் ஒருவன்.

மரப்பாவை ஓடிப்போய் குல்லாவை கையில் எடுத்தது. ஆனால் தலையில் மாட்டுவதற்குப் பதிலாக பல்லின் இடையில் பிடித்து, சமுத்திரக் கரையை நோக்கி வெகு வேகமாக ஓடிற்று.

ஊர் காப்பாளர், தங்களால் பினோஷியோவின் வேகத்தைப் பின் தொடர்ந்து ஓடமுடியாது என்று

உணர்ந்து, பலநகரக் காட்சிகளில் முதல் பரிசுபெற்ற ஒரு வேட்டை நாயை அவன் பின்னால் ஏவினார்கள். பினோஷியோ ஓடினான். நாய் அவனைவிட வேகமாய் ஓடிற்று. நாய்க்கும் பொம்மைக்கும் நடந்த இந்த ஓட்டப் பந்தயத்தின் முடிவைப் பார்க்க ஆவல் கொண்டு ஊர் ஜனங்கள் எல்லாம் தெரு வாசலிலும் வீட்டு ஜன்னல்களிலும் கூட்டமாய்க் கூடினர். ஆனால் அந்த ஓட்டம் பார்க்க அவர்களுக்குக் கிடைக்க வில்லை. இரண்டும் ஓடிய வேகத்தில் மேகமாய் புழுதி கிளம்பியதால் ஒருவர் கண்ணுக்கும் ஒன்றும் புலப்படவில்லை.

6. மீன் படவன்

பயங்கரமான அந்த ஓட்டப் பந்தயத்தின் முடிவு வேளை வந்தது. வேட்டை நாய் வேகமாய் ஓடி பினேஷியோவைப் பிடிக்க நெருங்கி விட்டது. அதன் மூச்சுக் காற்று பினேஷியோ தோள் மீது பட்டது. அது ஓடி வரும் இரைப்பு பினேஷியோவின் காது களில் கேட்டது. தான் இறந்து போனதாகவே பினேஷியோ நினைத்தான்.

நல்ல வேளையாக, இதற்குள், இருவரும் கடற் கரையை அடைந்து விட்டனர். கடலுக்கும் கரைக் கும் ஊடே இரண்டு அடி மணற்பரப்பு மட்டும் இருந்தது.

ஓடி வந்த பினேஷியோ திடீரென்று காண வில்லை. நாய் திகைத்தது. கண் மூடித்திறப்பதற்குள் பினேஷியோ மணலில் இருந்து துள்ளி, தண்ணீரில் குதித்து விட்டான். ஒரு தவளை கூட அவ்வளவு வேகத்தில் துள்ள முடியாது.

அந்த நாயின் பெயர் அலிடோரா. அந்த நாய் நிற்க முயன்றது. முடியவில்லை. ஓடி வந்த வேகத்தில் அதுவும் சமுத்திரத்தில் விழுந்தது. அதற்கு நீந்தத் தெரியாது. முன்னங்கால்களால் நீந்தி முடியு மட்டும் மிதந்தது. தத்தளிக்கத் தத்தளிக்க தண்ணீரில் மூழ்கிற்று.

மறுபடியும் தலையை வெளியில் நீட்டிய போது அதன் கண்கள் மிரண்டன. "நான் சாகிறேன் நான் சாகிறேன்" என்று குலைத்தது.

தனக்கு இனிமேல் பயம் இல்லை என்று தெரிந்த தால், பினேஷியோ தூரத்தில் இருந்து "நன்றாய் முங்கு! நன்றாய் முங்கு" என்று சிரித்தான்.

"அருமை பினேஷியோ! அன்பார்ந்த பினே ஷியோ என்னைச் சாவிலிருந்து காப்பாற்று" என்று முறையிட்டது அலிடோரா.

"உன் உயிரை நான் சாவிலிருந்து காப்பாற்றி னல் என்னைத் துரத்தாமலும் துன்புறுத்தாமலும் உன் வழியே நீ போவாயா?" என்றான் பினேஷியோ

"உறுதி கூறுகிறேன்! உறுதி கூறுகிறேன்! ஓடி வந்து உதவி செய். ஒரு கணம் கழிந்தால் உயிர் துறந்தேன்"! என்று அலறியது அலிடோரா.

பினேஷியோ தயங்கினன். "ஆனல், தாத", என்று அருகில் அழைத்து, "நல்லது செய்பவர் ஒரு நாளும் துர்க்கதி அடைய மாட்டார்" என்று அவன் தகப்பனர் அவனுக்கு அடிக்கடி சொன்ன உபதேச

மொழிகள் காதுகளில் ஒலித்தன. நீந்திப் போய் தன் இரண்டு கைகளாலும் நாயின் வாலைப்பற்றி இழுத்து பத்திரமாக கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தான்.

அலிடோராவால் நிற்க முடியவில்லை. அளவுக்கு மிஞ்சி தண்ணீர் குடித்து விட்டதால் அதன் உடம்பு காற்றடைத்த தோல் துருத்தி போல் உப்பி இருந்தது. புதிய சிநேகிதத்தை நம்ப மாட்டாமல் தற்காப்பாக தண்ணீரில் குதித்து சிறிது தூரம் நீந்திப் போய் தான் காப்பாற்றிய நண்பனைப் பார்த்து. "போய் வருகிறேன் அலிடோரா! நீயும் போய் வா! வீட்டில் எல்லோரிடமும் நலன் விசாரித்ததாகச் சொல்" என்றான்.

"வந்தனம்" என்றது அலிடோரா. "என் உயிரைக் காப்பாற்றியதற்கு ஆயிரம் வந்தனம். நீ செய்த பேருதவியை எந்நாளும் மறக்கமாட்டேன். இந்த உலகில் கொடுத்தது திரும்பக் கிடைக்கும். சமயம் வரும் பொழுது அலிடோரா நன்றி மறக்க மாட்டான். இதை நம்பு" என்றது.

பினோஷியோ கரை ஓரமாய் நீந்தினான். கரை ஏற ஏற்ற இடம் என்று அவன் நினைத்த இடத்தை அணுகியபோது அங்கு பாறை மத்தியில் குகை போன்ற இடத்திலிருந்து புகை வந்து கொண்டிருந்தது.

'புகை இருக்கும் இடத்தில் நெருப்பு இருக்கும். அந்த மட்டும் நல்லது தான். அங்கு போய் ஆடைகளையும் உலர்த்தி நானும் குளிர் காய்ந்து அப்புறம்.... அப்புறம் அங்கு போய் பார்க்கலாம்' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

இவ்விதம் தீர்மானம் செய்து பாறையை நோக்கி நீந்தினன். பாறையை அணுகி கரை ஏறும் சமயம், அவனை கரைக்கே இழுப்பது போல்.... இழுப்பது போல்.... ஆகாயத்தில் தூக்குவது போல் ஒரு உணர்ச்சி. ஏது இந்த உணர்ச்சி? யார் இழுக்கிறார்கள்? தப்பிக்க முயன்றான். அதற்குள், ஒரு மீன் படவன் வீசி இருந்த வலையில், சிறிதும் பெரிதுமான மீன்களுக்கு இடையில், தான் அகப்பட்டுக் கிடப்பதை உணர்ந்தபோது அவனுக்கு வியப்பாய் இருந்தது. பாபம் செய்த ஜீவன்கள் நரகத்தில் படும் வேதனைபோல் அந்த வலையில் அகப்பட்ட மீன்கள் துடித்து ஒன்றுக்கொன்று மோதி முட்டிக் கொண்டிருந்தன.

அந்த சமயம் குகையிலிருந்து மீன் படவன் வெளியே வந்தான். அவன் குரூபி. கடலில் வாழும் ஒரு குரூர ஜந்து போல் தோற்றமளித்தான். அவன் தலையில் ரோமத்திற்குப் பதிலாக பச்சைப் புல் அடர்ந்து, புதர் முளைத்தாற் போல் இருந்தது. அவன் உடம்பின் நிறமும் பச்சை. கண்களும் பச்சை. பூமி வரை எட்டிப் புறண்ட அவன் நீள தாடியும் பச்சை, கடலில் இருந்து கரை ஏறிய ஒரு பெரிய பல்லி தரையில் வாலை நட்டு நிற்பது போல் இருந்தான் பார்ப்பதற்கு.

" இன்றும் நல்ல அதிருஷ்டம். வலை நிறைய மீன் கிடைத்திருக்கிறது " என்றான் மீன் படவன்.

மீன் என்ற வார்த்தையைக் கேட்டதும் " நல்ல வேளையாக நான் மீன் இல்லை " என்று சந்தோஷப் பட்டான் பினோஷியோ, மனதில் சிறிது தைரியமடைந்து.

மீன் படவன் மீன்கள் நிறைந்த வலையை குகைக்குள் கொண்டு போனான். அந்த குகை இருண்டு, புகை அடர்ந்திருந்தது. குகை மத்தியில், அடுப்பின் மேல், ஒரு பெரிய சராவச் சட்டியில் எண்ணெய் புகைந்து கொண்டிருந்தது. அறை முழுதும் நாய்க் குடை நாற்றம் நிறைந்து மூக்கை பிய்த்தது.

" என்ன என்ன வகை மீன் கிடைத்திருக்கிறது பார்ப்போம்" என்று சொல்லி அந்தப் பச்சை செம் படவன், வலைக்குள் தன் கைகளை விட்டான். அவன் கைகள் அவன் உருவத்தின் அளவை மீறிப் பெரியதாய், மண்வெட்டி போல் அகலமாய் இருந் தன. அந்தக் கைகளால், கை நிறைய ஒரு பிடி மீன் எடுத்தான்.

'இவை முல்லட் இனம். தின்ன நன்றாய் இருக்கும்' என்றான் மனத் திருப்தியுடன். அவைகளை முகர்ந்து பார்த்து முகம் மலர்ந்து, பக்கத்தில் இருந்த தண்ணீர் இல்லாத வேறு சராவச்சட்டி ஒன்றில் அவைகளைப் போட்டான்.

இவ்விதம் பல தடவைகள் கைகளை வலைக்குள் விட்டு மீனை எடுத்து ஒவ்வொன்றாய் சட்டியில் போடும் போது அவன் நாக்கில் ஜலம் ஊற நக்கொட்டு கொட்டிக் கொண்டு,

" இவை ஒயிட்டிங் மீன் "

" இது சார்டைன் "

" இது அங்கோவி "

" இது, இது " என்று ஒவ்வொரு மீனை் பெயர் சொல்லி எடுத்து, எடுத்த ஒயிட்டிங் மீனையும் சார் டைனையும், அங்கோவியையும், எல்லாவற்றையும்

முல்லட் மீன் கிடந்த சட்டியில் முல்லட் மீனுடன் தோழமை கொண்டாட விட்டெறிந்தான். மீன் களெல்லாம் அந்தச் சட்டியில் குமைந்துகிடந்தன.

அந்த வலையில் கடைசியாக மிஞ்சினவன் பினேஷியோ.

பினேஷியோவை கையில் எடுத்து வெளியே தூக்கியதும், அந்த மீன் படவனின் பச்சைக் கண்கள் வியப்பினால் விரிந்தன. சிறிது திகிலும் அடைந்து "இது என்ன மீன்? நூதன மீனாய் இருக்கிறதே! இந்த மாதிரி மீன் நான் இதுவரை தின்றதில்லையே" என்றான்.

கவனமாய் கூர்ந்து நோக்கி கைகளில் உருட்டிப் பார்த்து "இப்பொழுது தெரிந்தது. இது மீன் இல்லை. இது ஒரு வகை கடல் நண்டு" என்றான்.

தன்னை நண்டு என்று சொல்லக் கேட்டதும் பினேஷியோவிற்கு பெருமை குறைந்தது.

கோபத்துடன், "நானா நண்டு? என்னை நண்டு என்றா நினைக்கிறாய்? இதுவா மரியாதை? நான் ஒரு மரப்பாவை என்று தெரிந்து கொள்" என்றான் கர்வம் உராய்ந்த தொனியில்.

"மரப்பாவையா! மரப்பாவை என்ற மீன் இது வரை பார்த்ததே இல்லையே. அதுவும் நல்லதற்கு தான். புதுவகை மீன் தின்னக் கிடைத்தது. நூதன ருசி சமைத்துத் தின்னலாம்" என்றான்.

"தின்னவா? நான் மீன் இல்லை என்று சொன்னது உனக்குத் தெரியவில்லையா? உன்னைப் போலவே புத்தியுடன் பேசுவது உனக்குக் காது கேட்கவில்லையா?" என்றது மரப்பாவை.

“கேட்கிறது, கேட்கிறது. ஆனதால் புத்தியுடன் பேசும் சக்தி படைத்த மீனாய் நீ இருப்பதால், நீ விரும்பும் மரியாதை உனக்கு அளிக்கத் தயாராய் இருக்கிறேன்”

“அது என்ன மரியாதை?”

“உன் மீது எனக்கு இருக்கும் ஆதரவிற்கும் தனித்த அன்பிற்கும் வெகுமதியாய் உன்னை நான் சமைத்து உண்ணும் முறையை உன் முடிவிற்கே விடுகிறேன். உன்னை எண்ணெயில் போட்டு பொறிக்கவா? ரசத்தில் போட்டு வேகவைக்கவா? சொல்.”

“என்னைக் கேட்டு முடிவு செய்வது உண்மையானால், இந்த இடத்திலிருந்து உடனே என்னை விடுதலை செய்து, வீடு போக அனுமதிப்பது என் பிரியம்” என்றான் பினோஷியோ பயம் இல்லாமல்.

“நீ விளையாடுகிறாயா? கிடைக்கக் கூடாத மீன் கையில் கிடைத்ததால், அதை ருசி பாராமல் விடுவேன் என்று நினைக்கிறாயா? மரப்பாவை மீன் என்பது தினம் கிடைக்கும் மீனா? இந்தப் பிரதேசத்தில் இவ்வளவு நாளாக பார்த்ததே இல்லையே! ஆனதால் நீ சொல்லப் பிரியப்படாததால் என் இஷ்டம் போல நான் செய்து கொள்கிறேன். எல்லா மீனுடன் உன்னையும் போட்டு பொறித்தால் சாவதிலும் உனக்குத் துணை கிடைக்கும். போகும் வழி தனி வழியாகாது. அந்த மட்டும் அதிருஷ்டசாலிதான்.”

இது கேட்டதும் பினோஷியோவிற்குத் துயரம் நெஞ்சை அடைத்தது. என்ன செய்வது என்று தெரியவில்லை. மீன் படவன் காலில் விழுந்தான்.

இறைஞ்சினன். அழுதான் "ஐயோ நான் பள்ளிக் கூடம் போய் இருந்தால் இதுவெல்லாம் ஏற்பட்டிராதே. என் நண்பர்கள் பேச்சைக் கேட்டு எனக்கு இந்தக் கதி வந்ததே. நான் அதற்குப் படுகிறேன். ஐயோ! ஐயோ!" என்று கதறினன் விலாங்கு போல் துவண்டு மீன் படவன் பிடியிலிருந்து முடியு மட்டும் நழுவித் தப்ப முயன்ருன். என்ன முயன்றும் பயனில்லை. அந்தச் செம்படவன் கோரைப் புல் ஒன்றைப் பறித்து பினேஷியோவின் கால்களையும் கைகளையும் வறிந்து கட்டி மற்ற மீன்கள் கிடந்த சட்டியில் பினேஷியோவையும் போட்டான். பக்கத்தில் வேறு ஒரு சராவச் சட்டி நிறைய அரிசிமா இருந்தது. மீன்களை ஒவ்வொன்ருக எடுத்து அரிசிமாவில் முக்கி எண்ணெய் சட்டியில் வேகப் போட்டான்.

எண்ணெய் சட்டியில் முதலில் மிதந்த மீன் ஒயிட்டிங் ஜாதி. அப்புறம் முல்லட். அப்புறம் அங்கோவி. அப்புறம் பினேஷியோவின் முறை வந்தது. சாவு நெருங்கி வருவதையும், அந்தச் சாவும் எண்ணெயில் பொறிந்து சாவது என்று தெரிந்ததும், பினேஷியோ ஆடி நடுங்கி மூச்சும் பேச்சும் முற்றுப் பெற்ருன்.

அதனுல் கண்களால் இறைஞ்சினன். ஆனல் அந்த அரக்கனின் பச்சைக் கண்களிலும் முகத்திலும் இரக்கம் என்பதே இல்லை. தனி மரியாதையாக பினேஷியோவை ஐந்து ஆறு தடவை அரிசி மாவில் முக்கி, கால் முதல் தலைவரை சுண்ணும்பு பூசி வெள்ளை அடித்த பொம்மை போல பினேஷியோ பக்குவம் அடைந்த போது, அவனைத் தலையால் தூக்கி................



7. கால் சிக்கி நடனம்

கொதிக்கும் எண்ணெயில் பிஞேஷியோவை போடுவதற்காக செம்படவன் கையை நீட்டிய போது குகை வாயில் வழியாக ஒரு பெரிய நாய் உள்ளே நுழைந்தது. அந்த நாய் அலிடோரா, பசியால் வாடி கடற்கரையில் படுத்து இருக்கும் பொழுது மீன் பொறியும் வாசனே அதற்கு எட்டி அது அங்கே வந்தது.

அரிசிமாவும் கையுமாக இருந்த செம்படவன் அந்த நாயைப் பார்த்து பயமுறுத்தலாக "வெளியே போ" என்று இரச்சலிட்டான்.

ஓநாய் போல் பசியாய் இருந்ததால், நாய் அதைக் கவனிக்கவில்லே. பயந்து, பதுங்கி, வாலே ஆட்டிக் கொண்டு "எனக்கொரு மீன் கொடு, போய் விடுகிறேன்" என்பது போல் நின்றது.

"போகிருயா! இல்லேயா!" என்ருன் செம்படவன் மறுபடியும் இரைந்து, நாயை உதைப்பதற்காக காலேயும் ஓங்கினன்.

நாய் இருந்த பசியில் இதையெல்லாம் பொருட்படுத்துவதாக இல்லே. அவன் மீது பாய எண்ணங் கொண்டது போல், பல்லேக் காட்டி உறுமிற்று.

அந்த சமயம், அந்த குகையில், ஒரு மெலிந்த குரல் கெஞ்சுதலாகக் கேட்டது. "அலிடோரா என்னைக் காப்பாற்று. நீ காப்பாற்ற விட்டால் இவன் என்னை எண்ணெயில் பொறிப்பான்" என்றது.

அந்த சப்தம் அலிடோராவுக்கு பழமையான சப்தம். மீன்படவன் கையில் இருந்த மாவு முக்கிய உருண்டை வடிவிலிருந்து அந்த சப்தம் வருவதை அலிடோரா தெரிந்து கொண்டது.

ஒரு நிமிஷம் கூட தாமதிக்காமல் அரிசிமா உருண்டையை வாயில் மெதுவாகக் கவ்வி பற்களுக்கு இடையில் வலியாமல் தாங்கி, மின்னல் வேகத்தில் ஓடி மறைந்தது.

ஆசைப்பட்ட பொருள் வாய்க்கு எட்டாமல் மறைவதைப் பார்த்து செம்படவன் வெறி பிடித்தவன் போல் நாயைப் பின் தொடர்ந்தான். ஆனால் சிறிது தூரம் ஓடுவதற்குள் அவனுக்கு பலத்த தும்மல் வந்தது. தும்முவதற்காக நின்ற போது அதற்குள் நாய் ஓடி மறைந்தது.

ஊருக்குள் போகும் பாதையை அடைந்தவுடன் அலிடோரா நின்று, பினோஷியோவை மெதுவாக தரையில் இறக்கி வைத்தது.

"எவ்வளவோ கடமை செலுத்த கடன் பட்டு இருக்கிறேன்" என்றான் பினோஷியோ.

"உபசார வார்த்தை ஒன்றும் அவசியம் இல்லை. நீயும் என்னைக் காப்பாற்றினாய்; நல்லது செய்தார்க்கு நல்லது கிடைக்கும். இவ்வுலகில் ஒருவருக்கு ஒருவர் உதவுவது ஒவ்வொருவர் கடமை."

"நீ எப்படி குகைக்குள் வந்தாய்?"

“ கரையில் அயர்ந்து, களைத்து, செத்துக் கிடந்தேன். மீனின் மணம் காற்றில் மிதந்து வந்தது. அது பசியைக் கிளப்பிற்று. உனக்கும் அதிருஷ்டம் இருந்தது. அதைத் துயர்ந்து உள்ளே வந்தேன். ஒரு நிமிஷம் கழித்து வந்தால்..........”

“ ஐயோ ! அதைச் சொல்லாதே ! சொல்லாதே ! நினைக்கவும் குடல் நடுங்குகிறது. நீ ஒரு நிமிஷம் கழித்து வந்தாயானால் நான் பொறியலாய்ப் பொறிந்து இதற்குள் அந்த அரக்கன் வயிற்றில் உரமாய்க் கிடப்பேன். பர் ! பர் ! நினைக்கவும் நடுங்குகிறது” என்று சொல்லி, பினோஷியோ நடு நடுங்கினான்.

அலிடோரா சிரித்துக் கொண்டு தனது வலது காலை நீட்டிற்று. மரப்பாவையும் வலது கையை நீட்டிற்று. இருவரும் கைகுலுக்கி சிநேகம் பாராட்டினார்கள். அப்புறம் பிரிந்தார்கள்.

நாய் வீட்டை நோக்கி ஓடிற்று.

பினோஷியோ தனித்தான். தனியே நடந்து சென்று, சிறிது தூரத்திற்கு அப்பால் ஒரு குடிசை வாயிலில் வெய்யில் காய்ந்து கொண்டிருந்த ஒரு கிழவன் அருகாமையில் சென்று, “ பெரியாரே ! பெரியாரே ! இங்கு யூஜீன் என்ற ஒரு பையன் தலையில் காயம்பட்டுக் கிடந்தானே, அவன் என்ன ஆனான் ? அவனைப் பற்றி ஏதேனும் தெரியுமா?” என்று வினவினான்.

“ யாரோ சில செம்படவர்கள் அவனை இந்தக் குடிசைக்குத்தான் தூக்கி வந்தார்கள். அவன் இப்பொழுது..........”

“ இறந்து விட்டானா ? ” என்றான் பினோஷியோ மன வருத்தத்துடன்.

" இறக்கவில்லை. உயிருடன் இருக்கிறான். அவனுடைய வீட்டிற்கு அவன் போய்விட்டான்."

" நிஜமாகவா! நிஜமாகவா!" என்றான் பினோஷியோ சந்தோஷத்துடன் குதித்து. " அப்பொழுது காயம் பலம் இல்லை போல் இருக்கிறது."

" காயம் பலம்தான். உயிருக்குக்கூட ஆபத்தாய் இருந்தது" என்று பதிலளித்தான் அந்தக் கிழவன். " யாரோ அவன் தலையில் கனத்த புஸ்தகத்தை எறிந்தார்களாம்."

" எறிந்தது யாரோ?"

" அவன் கூட வாசிக்கும் பையன் ஒருவன். பினோஷியோ என்று பெயராம்."

" அந்தப் பினோஷியோ என்பது யார்?" என்றான் பினோஷியோ தனக்குத் தெரியாததுபோல் பாசாங்கு செய்து.

" அவன் ஒரு கெட்ட பையனும், போக்கிரி, உருப்படாதவன்."

" பொய்! பொய்! முழுப்பொய்."

" உனக்குப் பினோஷியோவைத் தெரியுமா?"

" பார்த்து இருக்கிறேன்."

" உன் அபிப்பிராயத்தில் அவன் எப்படி?" என்றான் அந்தக் கிழவன் பினோஷியோவைப் பார்த்து.

" எனக்கு அவன் நல்ல பையன் என்றுதான் தோன்றுகிறது. படிப்பில் அக்கறை கொண்டவன், தாய் தந்தைக்கு அன்பு காட்டி அடங்கி நடப்பவன்."

இந்த பொய்களை அடுக்கிக் கொண்டு போகும் பொழுது மரப்பாவை, பழைய நினைவு வந்து மூக்கைத்

தொட்டுப் பார்த்துக் கொண்டது. மூக்கு இரண்டு அங்குல நீளம் வளர்வது தெரிந்து பயந்து போய் அழ ஆரம்பித்தது.

"பெரியாரே! நான் சொன்னதெல்லாம் பொய். என்னை நம்ப வேண்டாம். எனக்குப் பினோஷியோவை நன்ருய்த் தெரியும். அவன் முழுக்கெட்ட பையன். சோம்பேறி. தந்தை சொல் கேளாதவன். பள்ளிக்கூடம் போகாமல் கெட்ட பையன்களுடன் ஒளிந்து திரிபவன். எப்பொழுதும் விளையாட்டில் விருப்பங் கொண்டவன்."

இது சொல்லும் பொழுதே அவன் மூக்கும் பழைய அளவிற்கு குட்டையாயிற்று.

"உன் உடம்பெல்லாம் ஏன் வெள்ளையடித்து இருக்கிறது" என்று கேட்டான் கிழவன்.

"அதா! அதுவா! நான் சொல்கிறேன். வரும் பொழுது வெள்ளையடித்த சுவர் ஓரமாய் ஓடி வந்தேன். அந்த வெள்ளை ஒட்டிக்கொண்டது" என்ருன். அரிசிமாவில் பக்ஷணமாய் முக்கப்பட்டதை சொல்ல வெட்கப்பட்டான்.

"உன் சட்டை, கால் சட்டை, குல்லா எல்லாம் எங்கே? என்ன செய்தாய்."

"வரும் வழியில் கள்வர்களைக் கண்டேன். அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். பெரியாரே, ஒன்று கேட்கிறேன். நான் வீடு போய்ச் சேருவதற்கு உம்மிடம் ஆடைகள் இருக்கின்றனவா? தருவீரா?" என்ருன்.

"என்னிடம் ஆடைகள் இல்லை. காய்கறி கட்டி வைக்கும் சாக்கு ஒன்று இருக்கிறது. வேண்டுமானல் அதை எடுத்துக் கொள். தருகிறேன்" என்ருன் கிழவன்.

பிஞேஷியோ கிடைத்தது போதும் என்ற நிலையில் இருந்தான். மறுமொழி பேசினல் மனம் மாறுமோ என்று பயந்து, அந்தச் சாக்கை உடனே வாங்கி, தலைப்பக்கம் ஒரு துவாரமும், இரு கைப்புறங் களில் இரண்டு துவாரங்களும் கத்தரித்து வெட்டி, சட்டை அணிவது போல் சாக்கை அணிந்துகொண் டான். இந்தச் சாக்கு உடையை அணிந்துகொண்டு ஊரை நோக்கி ஓடினன்.

போகும் பொழுது அவனுக்கு சம்மதிக்க வில்லை. சாக்கு உடை அவனுக்கு மனது பிடிக்க வில்லை. ஒரு அடி முன்னல் போனல் இரண்டடி பின்னல் நடப்பான். இவ்விதம் தயங்கித் தயங்கி தன்னுள்ளேயே பேசிக்கொண்டான்.

“இந்த அழகுடனும் அணிகலத்துடனும் தேவதை முன் எப்படிப் போவேன்? அவள் என்னைப் பார்த்தால் என்ன சொல்லுவாள்? மறுமுறையும் நான் ஓடினதற்கு என்னை மன்னிப்பாளா? நிச்சய மாக மன்னிக்க மாட்டாள். மன்னிக்க மாட்டாள் என்று தான் நினைக்கிறேன்........ஆனல் எனக்கு வேணும். நான் ஒரு உதவாக்கரை. நான் எப் பொழுதும் திருந்துகிறேன், திருந்துகிறேன் என்று சொல்வது தவிர ஒருநாளும் திருந்தப் போவதில்லை. நல்லது எதுவென்று புத்திக்கு தெரிகிறது, அதன்படி நடக்கத் தெரியவில்லை. தீயது எது என்று தெரியவும் செய்கிறது. தவிர்க்கத் தெரியவில்லை. உள் நின்று ஒரு பொருள் ஆட்டுவது தெரிகிறது. ஆட்டும் பொருள் தெரியவில்லை” என்று தலையில் அடித்துக் கொண்டான்.

பிஞேஷியோ ஊரை அடைந்த பொழுது நடுநிசி வேளை. நள்ளிருளும் கூட, புயல் அடித்தது. மழை

தாரை தாரையாய்ப் பெய்ததால் நேரே தேவதை வீட்டை அடைந்து கதவைத் தட்டினுல் உடனே உள்ளே அனுமதிப்பார்கள் என்று எதிர்பார்த்தான்.

தேவதை வீட்டை அடைந்த பொழுது அவன் தைரியம் அவனைக் கைவிட்டுச் சென்றது. பயமும் வெட்கமும் புகுந்தது. கதவைத் தட்ட ஒரு அடி முன்னுல் போனுல் கதவைத் தட்டாமல் இரண்டு அடி பின்னுல் ஓடுவான். மறுபடியும் கதவண்டை போன போதும் பயம் நீங்கவில்லை. மூன்ருவது முறையும் கதவண்டை போனுன். வெட்கம் தடுத்தது. கதவைத் தட்ட துணிவு வரவில்லை. கடைசியாக நான்காவது முறையாக தைரியத்தை துணைகொண்டு உடம்பெல்லாம் நடுங்க, பயந்து பயந்து, கதவை மெதுவாக ஒரு தட்டுத் தட்டினுன்.

யாரேனும் வருவார்கள் என்று நின்று பார்த்தான். அரைமணி நேரம் கழிந்த பின் மேல்மாடி ஒன்றில் ஒரு ஜன்னல் திறந்தது. அது அந்த வீட்டின் நாலாவது மாடி. நத்தை ஒன்று, ஏற்றின விளக்கைத் தலையில் தாங்கி, ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்து, "இரவில் இந்த நேரத்தில் யாரது கதவைத் தட்டுவது?" என்றது.

"தேவதை வீட்டில் இருக்கிருளா?" என்ருன் பினேஷியோ.

"தேவதை நித்திரை செய்கிருள். இப்பொழுது எழுப்புவதற்கு இல்லை. நீ யார்?" என்றது நத்தை.

"நான் தான் நான்" என்ருன் பினேஷியோ.

"அந்த நான் யார்?" என்றது நத்தை.

"பினேஷியோ."

" பினோஷியோ யார்?"

"தேவதை வீட்டில் வசிக்கும் மரப்பாவை!"

" ஓ! அப்படியா? இப்பொழுது தெரிந்து கொண்டேன். இதோ இறங்கி வந்து கதவைத் திறக்கிறேன் " என்றது நத்தை.

" தயவு செய்து ஓடி வந்து திற. எனக்குக் குளிர் நடுக்குகிறது " என்றான் பினோஷியோ.

" என் அப்பனே! நான் ஒரு நத்தை. நத்தைக்கு ஏது அவசரம்?"

ஒரு மணி நேரம் கழிந்தது. இரண்டு மணி நேரமும் கழிந்தது. கதவு மூடிய படியே இருந்தது.

பினோஷியோ சொட்டச் சொட்ட நனைந்து, குளிரினாலும் பயத்தினாலும் நடுங்கிக் கொண்டு இருந்ததால், தைரியத்தை வருத்திக் கொண்டு மறு முறையும் கதவைத் தட்டினான். இந்தத் தடவை முன்னிலும் பலமாகத் தட்டினான். இரண்டாவது மாடியில் ஒரு ஜன்னல் திறந்தது. அந்த நத்தை அப்பொழுது தான் அங்கு வந்திருந்தது.

" அன்பார்ந்த நத்தையே இரண்டு மணி நேரமாக தெருவில் நின்று கொண்டு இருக்கிறேனே! இது போன்ற இரவில் இரண்டு மணி நேரம் இரண்டு ஆண்டுகளாக நீடிக்கிறதே! ஓடிவா! ஓடிவந்து திற."

" சிறுவனே நான் ஒரு நத்தை. நத்தைக்கேது அவசரம்?" என்றது மறுபடியும். ஜன்னல் கதவை மறுபடியும் மூடிற்று நத்தை.

அப்பால் பன்னிரண்டு மணி அடித்தது. அப்புறம் ஒன்று....இரண்டு. கதவு மூடியபடியே இருந்தது.

பிஞோஷியோ பொறுமை இழந்தான். வீடு முழுதும் ஆடி அசையும்படி கதவை இடிப்பதான நோக்கத்தில் உலக்கை கனத்தில் கிடந்த ஒரு மரக்கட்டையை கையில் எடுத்தான். அந்த உலக்கை விலாங்கு மீனாய் மாறி கையிலிருந்து நழுவி தெருவில் ஓடிக் கொண்டிருந்த மழை ஜலத்தில் மறைந்து விட்டது.

" அதுவும் அப்படியா! உலக்கை போய் விட்டால் என் தகப்பனார் கொடுத்த கால்கள் எனக்கு இருக்கின்றன " என்று சொல்லி கதவுப்பக்கம் இருந்து பத்தடி பின்னால் வந்து வேகமாக ஓடி கதவை ஒரு உதை உதைத்தான் பிஞோஷியோ. உதைத்த உதையை கதவு தாங்கவில்லை. கதவு பிளந்தது. பிஞோஷியோவின் கால் கதவில் மாட்டி அகப்பட்டுக் கொண்டது. காலைத் திரும்ப எடுக்க முயன்றபோது முடியவில்லை. ஆணி அறைந்து இறுக்கியதுபோல் கால் கதவில் சிக்கிக் கொண்டது.

பிஞோஷியோவின் நிலைமையை நினைத்துப் பாருங்கள்! இரவு முழுதும் ஒரு கால் பூமியிலும் ஒரு கால் கதவிலும் ஆக நடனமாடினான்.

காலையில், வழக்கம் போல நேரத்தில், கதவு திறக்கப்பட்டது. நான்காவது மாடியில் இருந்து தெரு வாசலுக்கு இறங்கி வர நத்தைக்கு ஒன்பது மணி நேரம் தான் பிடித்தது. வந்த வேகத்தில் நத்தைக்கு உடம்பு கூட வியர்த்தது.

"உன் காலை கதவில் மாட்டிக்கொண்டு என்ன தவம் செய்கிறாய்?" என்றது நத்தை சிரித்துக் கொண்டு.

"அது ஒரு எதிர்பாராத சம்பவம். நான் படும் வேதனையிலிருந்து என்னை விடுவிப்பாயா? என்னால் வலி தாங்கவில்லை. நீ நினைத்தால் முடியும்" என்றான் பினோஷியோ.

"அது தச்சன் செய்யும் தொழில். என் ஆயுளில் நான் தச்சுத் தொழில் செய்தது இல்லை."

"நான் அகப்பட்டுக் கொண்டதை தேவதையிடம் தெரிவிக்கமாட்டாயா?"

"தேவதை தூங்குகிறாள். இப்பொழுது எழுப்பக் கூடாது."

"அப்பொழுது பகல் முழுதும் இந்தக் கதவில் மாட்டிக்கொண்டு நான் நிற்க வேண்டும் என்பது உன் எண்ணமா?"

"நிற்காவிட்டால் தெருவில் போகும் எறும்புகளின் எண்ணிக்கையை கணக்கிட்டுப் பாரேன்."

"எனக்குத் தின்கவாவது ஏதேனும் கொண்டு வரமாட்டாயா? எனக்குப் பசி பிடுங்குகிறது."

"அது கேளு, கொண்டு வருகிறேன்" என்று நத்தை உள்ளே சென்றது.

உடனே, மூன்றரை மணிநேரம் கழித்து, தலையில் ஒரு வெள்ளித்தட்டைத் தாங்கி நத்தை திரும்ப வந்தது. அந்த வெள்ளித் தட்டில் பாதி ரொட்டித் துண்டு, ஒரு பொரித்த கோழிக்குஞ்சு, நான்கு பழங்கள் இருந்தன.

"தேவதை உனக்கு உணவு அனுப்பி இருக்கிருள்" என்றது நத்தை.

தேவதையின் அன்பையும், ருசியான உணவையும், பார்த்து பொம்மை ஆறுதல் அடைந்தது. உளம் பூரித்தது. ஆனல் வாயில் போட்டபோது என்ன ஏமாற்றம்! அந்த ரொட்டி, சுண்ணும்புக் காரையாய் மாறிற்று. கோழிக்குஞ்சு காகிதத்தால் செய்த அட்டை உருவம். ஆப்பிள் பழங்கள் வர்ணம் தீட்டிய கூழாங்கற்கள்.

வாயெல்லாம் அருவருப்பு. என்ன செய்வது என்று தெரியவில்லை. அழவேண்டும் என்று நினைத்தான். அந்த வெள்ளித் தட்டையும் அதில் இருந்த ஏமாற்றத்தையும் தெரு வெள்ளத்தில் வீசி எறிய கையில் எடுத்தான். ஆனல் நினைத்தது நடக்கவில்லை. பசியின் பலஹீனத்தினல் களைத்துப் போய் இருந்ததால் மூர்ச்சை அடைந்தான்.

தன் நினைவு வந்தபோது ஒரு கட்டிலில் மெத்தை விரித்து, அதில் அவன் படுத்திருப்பதை அறிந்தான். தேவதை அவன் பக்கம் உட்கார்ந்திருந்தாள்.

"இந்த முறையும் உன்னை மன்னிககிறேன். ஆனல் இனி மூன்ருவது முறையும் நீ தவறுதலுக்கு தலைப்பட்டால்....அதுவே கடைசி. அத்துடன் நீ என்னை இழந்தாய்" என்ருள் தேவதை.

பினேஷியோ தேவதை கால்களில் விழுந்து வாககளித்தான். இனிமேல் ஒழுங்காகவும் நன்ருகவும் படிப்பதாகவும் என்றென்றைக்கும் நல்ல பையனுகவே வாழ்வதாகவும் உறுதி கூறினன். அப்பால் அந்த வருஷம் முழுவதும் சொன்ன வாக்குறுதிப் படியே நடந்தான். ஏன்? விடுமுறைக்கு முன்

நடந்த பரீட்சையில் அவன் தான் வகுப்பு மாணுக்கர் களில் முதல்வனுகத் தேறினுன். பொதுவாக அவன் நடத்தை மனதிற்குத் திருப்தியாகவும் பெருமை அளிப்பதாகவும் இருந்தது. தேவதை மனம் களித்து ஒரு நாள் பினுேஷியோவை அருகில் அழைத்து, "உன் வெகு நாளைய மனோரதம் நாளை பூர்த்தி யாகும்" என்ருள்.

"அப்படி என்ருல்....?"

"உன் மரப்பாவை வாழ்வு நாளை கடைசி. நாளை நீ சிறுவனுகப் போகிருய்" என்ருள் தேவதை.

வெகு நாளாக ஆசைப்பட்ட இந்த நல்ல அதிர்ஷ்டம் கை கூடும் தினத்தைக் கேட்டு பினுே ஷியோ அடைந்த ஆனந்தத்தை பக்கத்தில் இருந்து பார்த்தவர்களுக்குத்தான் சொல்லத் தெரியும். அவன் மாமுகம் மலர்ந்தது. மரக் கண்கள் விரிந் தன. முகமெல்லாம் கண்ணுய், கண் நிறைய நீர் மல்கிற்று.

இந்த வைபவத்தை நிகழ்த்த மறு நாள் தேவதை வீட்டில் ஒரு பெரிய விருந்து ஏற்பட்டாயிற்று. பள்ளிப் பிள்ளைகள் எல்லாருக்கும் அழைப்புச் சென்றது. தேவதை இருநூறு கோப்பைத் தேநீர், இருநூறு கோப்பைப்பால், இருபுறமும் வெண்ணெய் தடவிய ரொட்டி இன்னும் என்ன என்னவோ தயார் செய்தாள். அந்தத் தினமும் ஆனந்தமாகவும் சந்தோஷமாகவும் கழியும் போல் விடிந்தது.

மனிதர் வாழ்வில் போல் மரப்பாவை வாழ்விலும் 'ஆனல்" என்ற வார்த்தை மறைந்து இருந்து நிகழும். அந்த 'ஆனல்.' குறிக்கிட்டு நினைத்ததை கெடுத்தது.